ஆனி: 1995
விலை: 25/=

# வெளிச்சம்


- தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்

- பிரம்மஞானி
- அடேல் ஆன்
- ப. புஸ்பரட்ணம்
- அ. சங்கிலிகுமாரன்

- நேர்காணல் கோகிலா மகேந்திரன்

- சாந்தன்
- ஞானரதன்
- மாலிகா

- பேராசிரியர்கா. சிவத்தம்பி
- இயல்வாணன்



விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

உணவின்றி உயிர் வாழ முடியாது. ஆனால்
அந்த உணவு சுவையானதாக இருக்க வேண்டும்.
சுவையான அரிசியைத் தருகிறது.

கண்ணன் அரிசி ஆலை

- தரமானது
- சுவையானது
- மலிவானது
- நாட்டரிசி
- தீட்டல் பச்சை
- உடையல் பச்சை

இவற்றின் உற்பத்தியாளரும், விற்பனையாளரும்

## கண்ணன் அரிசி ஆலை

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

வெளிச்சத்தை வாழ்த்துகிறோம்

- தேங்காய்
- கொப்பறா
- பொச்சுமட்டை

இவற்றை மொத்தமாக
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

## ந. சண்முகவேல்

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

17-6-1995

# வெளிச்சம்

கலை, இலக்கிய சமூக இதழ்

வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

ஓவியங்கள்:
தயா, கோபாலி

அச்சு:
ம. மரியதாஸ்

இதழமைப்பு:
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

தொடர்புகட்கு:

"வெளிச்சம்"
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப்பணியகம்,
கோண்டாவில்,
தமிழீழம்.

## தலைவாசல்

இதழ்: 38 ஆனி: 1995

உயிர்வாழ உத்தரவாதமற்று, இன்னலுற்று, இழிநிலைபெற்று, இழப்புக்களே ஜீவிதமென்றாகி விடுதலைக்காகப் போராடும் ஒரு தேசத்தில் ஆற்றல் வாய்ந்த கலைஞர்களும் இலக்கியகர்த்தாக்களும் கொடுமைகளைச் சுட்டெரிக்கத் தூண்டும் அக்கினிக் குஞ்சுகளாக அவதாரமெடுப்பர். தன்னினத்தின், தன் தாயகத்தின் இழிநிலைகண்டு, அதற்கெதிராக மக்களைத் தூண்டி தாமும் போரில் குதிப்பர். இந்த அக்கினிக் குஞ்சுகள் இழப்புக்கள் வரும் நாளில் தாமும் துடித்து, பெருவெற்றிகள் வரும் வேளை தாமும் குதித்து விடுதலையின் இதயத்துடிப்பாகி விடுகின்றனர்.

காலத்தின் தேவை, விடுதலைநேசிப்பு, அதற்கான அர்ப்பணிப்பு இவையெல்லாம் சேர்ந்து விடுதலைக்குப் போராடும் மக்களை ஒரு நேர்கோட்டில் இணைத்துவிடுகின்றது. இழப்புக்கள் மிஞ்சி இனிப்படமுடியாதென்று எழும்போது கலைஞனே முதலில் எழுந்து முரசுகொட்டுவான்.

1995-04-28, 29 ஆம் தேதிகளில் தமிழீழ விடுதலைப்போர் புதிய பரிமாணம் எடுத்த நாட்கள். எம்மக்கள் எல்லோரும் இறக்கைகட்டிப் பறந்த சந்தோச சம்பவங்கள் இந்த நாட்களிலேயே நடந்தன. தங்கள் கண்களைத் தாங்களே நம்பாது அதிசயித்தது எங்கள் தாயகம். காண்பது கனவேயல்லவென்று மேனியில் நுள்ளிப் பார்த்தனர் எம் மக்கள். அந்த நாட்களின் உணர்வே உவகையில் உச்சமானது. 16 மணிநேர இடைவெளிக்குள் இரண்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இ... நூலகம்.

# வெளிச்சம்

போர்க்கள விமானங்களை புலிவீரர் நிலத்திடை வீழ்த்திய போது தமிழ் மக்கள் நிமிர்ந்து கொண்டனர். உலகம் எம்மை எட்டிப்பார்த்து 'இவர்களுக்கு இந்த வல்லமை எப்படிச் சித்தித்தது' என்று திகைத்தது. சிங்கள தேசத்துக்கு அன்று விழுந்த அடியின் விறைப்பு இன்றுவரை தீரவில்லை. அந்த இரண்டு தினங்களும் எம்மக்கள் அடைந்த ஆனந்தக்களிப்பிருக்கிறதே அதை எவரும் வார்த்தையில் வழங்க முடியாது என்றிருந்தபோதுதான் எம்மண்ணின் 29 கவிஞர்கள் தங்கள் தங்கள் பார்வைத் தடத்தில் நின்று அந்தப் பரணிபாடத்தக்க கருவை வைத்துக் கவிதை பாடினர்.

பொய்யற்று, வெறும் புனைவற்று, ஒப்புக்குச் சொல்லும் ஒப்பாரி போலற்று, உண்மை உணர்வுக்கு வார்த்தை வடிவம் கொடுத்த இவர்களின் கவிதைகளின் தொகுப்பே **வானம் எம் வசம்.**

எம்மக்களின் உணர்வுக்கு வடிவமைத்ததிலும், எமது போராட்டப் பற்றுறுதியை எடுத்துக் காட்டியதிலும், இந்தத் தொகுப்பு நூல் என்றென்றும் முதன்மையானதாகவே விளங்கும். காலமும், தேவையும் உண்மையான கலைஞனையும், மக்களையும் ஒன்றிணைக்கும். தர்மத்தின் குரலாகவும், சத்தியத்தின் திசையாகவும் கலைஞர்கள் இருக்கவேண்டும். மனுக்குலத்தின் மையப்புள்ளி உண்மையான ஒரு கலைஞனேயாவான். போராடும் ஒரு தேசத்தின் அல்லது இனத்தின் சுவாசமும் அவனேயாவான். இப்படியான பலரை எம் தேசமும் பிரசவித்துவிட்டது என்பதறிந்து நாம் களிப்படைகிறோம். தொடர்ந்தும் போராட்டத்துடன் பல்லும் சில்லுமாக முன்னேறுவோம். □□


மரத்தளபாடங்களில் உங்கள் தெரிவுக்கு

**பொன்முடிக்கு விரையுங்கள்**

- பஞ்சுமெத்தைகள்
- கபேட்
- செற்றிகள்
- தும்புமெத்தைகள்
- கட்டில்கள்
- குசன்செற்றிகள்
- றெசின் ரேபிள்
- கதிரைகள்
- டைனிங்ரேபிள்கள்

மற்றும் அனைத்து
தளபாடப் பொருட்களுக்கும்

**பொன்முடி அணைக்கல நிலையம்**

இல. 315, இளங்கோ வீதி,
(மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்.

# வெளிச்சம்

அவதாரமெடுத்தது சோளகம்.
இனி
அடிவளவுப் பனைகளுக்குக் கலையேறும்.
காவோலை பறை முழங்க,
தலை விரித்தாடும்.
மரங்களுக்கு மட்டு மல்ல...
இங்கு
மாறி மாறிவரும் சிம்மாசனங்களுக்கும்
இது வழக்கம்.
யாரோ உருவேற்றிவிட
ஏவற்பேய்கள் கூரைபிரிக்கும்.
சூனியக் காரரின் தீச்சட்டியிலிருந்து
கொள்ளி வாற்பேய்கள் கூத்தாடும்.
கோழிச் சேவலும்,
சோமபானமும் கேட்கும்.
திருக்கைவாலெடுத்து விளாசினால்
மலையேறும்.
இது வழக்கமாகிப் போனது.
இன்று
புதிய சூனியக்காரி ஒருத்தி
"பெல்லி" விடுகின்றாள்.
கொம்பு சீவிய எமன் வாகனம்
நிலாவரையில் "ஸ்வாகா."
பயந்து போன மந்திரக்கிழவி
ஓதி நூல் கட்டுவதற்கு
ஓடித்திரிகின்றாள்.
வரட்டும்
எதற்கும் தயார்.
திருக்கைவால் ரெடி.



— மாலிகா

# போராட்டம் கல்விக்கு கவசம்
# கல்வி போராட்டத்திற்கு காப்பரண்

உரிமைகளுக்காக நாம் தொடுத்த போராட்டம் இன்று உயிர் வாழ்வதற்கான போராட்டமாக விரிவாக்கம் பெற்றிருக்கிறது. அன்றொரு காலம் நாம் அமைதி வழியில் உரிமை கேட்டோம். இன்று நாம் இரத்தம் சிந்திப் போராடவேண்டியிருக்கிறது. உயிர்ப்பறி கொடுத்து உயிர் வாழ வேண்டியிருக்கிறது.

இன அழிவைத்தடுத்து எமது மண்ணையும், மக்களையும் பாதுகாப்பது இன்று எமது விடுதலை இயக்கத்தின் முதன்மையான கடனாக உள்ளது. இதற்குப் போராடியே ஆகவேண்டும். போராடி வாழ்வதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.

போராடுவதற்கு போராளிகள் வேண்டும். எதிரியுடன் போர் நடத்த ஒரு படை வேண்டும். இந்த விடுதலைப்படை இல்லாது போனால் எமது இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்தமுடியாது. இந்தப் போராளிகளை, இந்த இளம்புலி வீரர்களை, நாம் எமது மக்கள் சமுதாயத்திலிருந்தே அணி திரட்ட வேண்டியுள்ளது. நாம் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில்லை. இது ஒரு தேசிய விடுதலைப்போர் என்பதால் சுய விருப்பிலேயே இளம் போராளிகள் எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். தமது சுயத்தைத்துறந்து, தமது சொந்த வாழ்வின் சுகபோகங்களைத்துறந்து, பந்தத்தின் பற்றுறவுகளைத்துறந்து, தமது மண்ணையும், மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றாளர்கள் எம்முடன் இணைகிறார்கள். இந்தப் போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்றவேண்டும்; கௌரவிக்க வேண்டும்.



*தமிழீழத் தேசியத் தலைவர்*
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

தாயக விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப்பாடாகும்.

(,எமது மக்களின் விடுதலைக்காக' கருத்துத் தொகுப்பிலிருந்து)

# உடையாத விலங்குகள்

அடேல் ஆன்

'உடையாத விலங்குகள்' (UNBROKEN CHAINS) என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தில் நிலவும் சீதன முறைமை பற்றி அடேல் ஆன் ஆங்கிலத்தில் எழுதிய நூல் தமிழாக்கம் செய்யப்பட்டு தொடர் கட்டுரைகளாக 'வெளிச்சத்தில்' பிரசுரமாகி வருகிறது. இந்த நூலின் இரண்டாம் பாகத்தின் நான்காம் பகுதியை இங்கு தருகிறோம்

## 8

முதலாவதாக, பெண்களின் வீட்டு ஊழியம் என்ற பிரச்னையை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். பெண்களின் வீட்டு வேலை சம்பந்தப்பட்ட மட்டில், தமிழர் சமூகத்திற்கும் உலகத்தின் ஏனைய சமூகங்களுக்கும் மத்தியில் அடிப்படையான வேறுபாடுகள் இல்லை என்றே சொல்லலாம். வீட்டு ஊழியம் என்பது பெண்களின் 'இயல்பான' வேலை என்றே எங்கும் கருதப்படுகிறது. இந்தக் கருத்தின்படி வீட்டு வேலை என்பது பெண்களின் உள்ளீட்டான திறனாற்றல் அல்லது அவர்களது இருப்பு நிலையின் சராம்ச இயல்பு எனக் கொள்ளப்படுகிறது. தமிழ் சமூகத்திலும் வீட்டு வேலை என்பது வாழ்விடத்தில் தனிமறைவாக பெண்கள் புரியும் ஊதியமற்ற தொழிலாகக் கருதப்படுகிறது. பிள்ளைகளைப் பராமரித்தல், சமைத்தல், வீட்டை சுத்தம் செய்தல், உடுப்புகளை சலவை செய்தல், முதியோர், சுகவீனமுற்றோரைப் பேணுதல், வீட்டு மிருகங்களைப் பராமரித்தல்—இப்படியாக பல்வேறு ரகமான செயற்பாடுகளைக் கொண்டதாக வீட்டு வேலை அமைகிறது. இந்த வீட்டுவேலை பெண்களின் இல்லறக் கடமையாகவும் கருதப்படுகிறது. தினமும் தொடரும் இந்த வீட்டுப் பணிகளை, தமது வசதிக்கேற்ற முறையில், பெண்கள் தாமாகவே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

'பலவீனமான பாலினத்தவர்' என்ற ரீதியில், பெண்கள் புரியும் வீட்டு ஊழியமானது ஆக்கமற்ற, இலாபமற்ற உழைப்பாகச் சித்திரிக்கப்படுகிறது. இந்தப் பார்வை பெண்கள் புரியும் வீட்டு வேலையை மதிப்புக் குறைந்ததாக, கீழ்த்தரமானதாகக் கொள்கிறது. வீட்டு வேலைகளில் பங்குகொள்ள ஆண்கள் தெரிவிக்கும் எதிர்ப்பு இதனை உறுதிப்படுத்துகிறது. தாங்கள் பெற்றெடுத்த பிள்ளைகளைப்


பராமரிக்கவோ அல்லது வீட்டுச் சூழலைப் பேணுவதற்கோ பெரும்பாலான ஆண்கள் விரும்புவதில்லை. இயல்பாகவும், மரபுரீதியாகவும் பெண்களுக்கு உரித்தானதாகக் கருதப்படும் வீட்டுவேலைகளில் தாம் பங்கு கொள்வது தமது சுய-கௌரவத்திற்கு இழுக்கானதாக ஆண்கள் கருதுகின்றனர். அத்துடன் ஆண்களின் இல்லறத் தேவைகளைப் பேணுவது பெண்களின் கடமை என்ற எண்ணப்பாடும் இருக்கிறது. ஆண்களின் வருமானத்தில் தங்கியிருக்கும் ஊழியம்பெறாத உழைப்பற்றவர்கள் எனப் பெண்கள் கருதப்படுவதால், ஆண்களின் தனிப்பட்ட வீட்டு வேலைக்காரர்களாகவே அவர்கள் நடத்தப்படுகிறார்கள்.



உலகடங்கிலும் பெண்கள்மீது சுமத்தப் பட்டிருக்கும் வீட்டுவேலை என்ற இந்தப் பதிரான பிரச்னை பல கேள்விக் குறிகளை எழுப்புகிறது. காலம் காலமாக, தொடர்ச்சியாக வீட்டு ஊழியம் பெண்ணினம்மீது திணிக்கப்பட்டிருப்பது ஏன், என்பதுதான் மையமான கேள்வி. வீட்டுத் தொழிலை பெண்கள் செய்வதுதான் 'இயற்கையின் நியதி' எனக் கருதப்படுவது ஏன்? இந்தப் பூமியிலுள்ள பண்பாட்டு உலகங்கள் அனைத்தும். தம்மிடையே வேறுபட்ட உலகப் பார்வைகளை கொண்டிருந்தபோதும், வீட்டிற்கு அடிமைவேலை செய்துகிடப்பதே பெண்களின் விதியென பொதுவான கருத்தைக் கொண்டிருப்பதன் காரணமென்ன? அனைத்துலக நியமமாக உருப்பெற்றிருக்கும் இந்த வழக்கத்தை நியாயப்படுத்த எந்தவிதமான வாதங்கள் முன்வைக்கப்பட்டபோதும், இந்தச் செயல் முறையானது, மனித குலத்தின் அரைவாசிப் பகுதியினரான பெண்களுக்கு இழைக்கப்படும் பாரதூரமான ஒரு சமூக அநீதி என்பதில் ஐயமில்லை. வீட்டு ஊழியம் பற்றி ஒரு சமூக சிந்தனையாளர் குறிப்பிடுகையில், ''குடும்ப பொருளாதாரம் என்ற வட்டத்திற்குள், மிகவும் கீழ்த்தரமான, கடினமான, அலுப்புத்தட்டும் தொழில்புரியும் வீட்டு அடிமைகளாக பெண்கள் நசுக்கப்படுகிறார்கள்'' என வர்ணித்திருக்கிறார் (8) தமிழீழம் உட்பட உலகடங்கிலும பெண்களின் பரிதாப நிலையைப் பார்க்குமிடத்து இந்தச் சித்தரிப்பு சரியானதென்றே சொல்லவேண்டும்.

வீட்டுவேலை காலத்தை விழுங்குகிறது. உடற் சக்தியை விரயமாக்கிறது. திரும்பத் திரும்ப ஒரே வேலையைச் செய்வதால் சலிப்புத்தட்ட வைக்கிறது. சோர்வை ஏற்படுத்துகிறது. இந்த வேலை பெண்களின் அறிவு வளர்ச்சிக்கோ அல்லது உள வளர்ச்சிக்கோ ஏதுவானதாக இல்லை. இதில் சிருஷ்டித் தன்மையோ, சவால்களோ, சுய-மேம்பாட்டிற்கான உந்துதல்களோ எதுவுமில்லை. குடும்பத்தில், சமூகமயமாக்கல் என்ற நடைமுறையின் அடிப்படையில் பெண் பிள்ளைகளுக்கு வீட்டுவேலை பயிற்றப்படுகிறது.

# வெளிச்சம்



சோர்வும் சலிப்பும் நிறைந்த சாதாரண வேலை என்பதால் வீட்டு ஊழியம் ஏதோ அர்த்தமற்ற உழைப்பு எனக் கருதிவிடக்கூடாது. வீட்டுவேலை என்பது ஆக்கபூர்வமான உழைப்பு. அதாவது, சமூகத்தை வாழவைக்கவும் அதனை மீளாக்கம் செய்யவும் நாளாந்தம் பெண்களால் மேற்கொள்ளப்படும் தொழில். சமூக வாழ்வுக்கு வீட்டு வேலை அவசியமானதா, பெறுமதியானதா என்பது பற்றி வாதப் பிரதிவாதங்கள் நிறையவுண்டு. இதனை, 'வீட்டு ஊழியம் பற்றிய விவாதம்' என்பார்கள் (9). முதலாளிய பொருளுற்பத்தியில், பெண்கள் புரியும் வீட்டுவேலை நிகர லாபம் பெற்றுத் தருகிறதா என்ற கேள்வியை மையமாகக்கொண்டே இந்த விவாதம் எழுந்தது. எனினும், இந்த விவாதம் எதார்த்த சமூக நடைமுறை வாழ்வுக்குப் புறம்பானதாக, கோட்பாடுகளின் கட்டமைப்பு வரம்புகளுக்குள் நின்றதால் அறிவுபூர்வமான முடிவுகள் எதையும் தரவில்லை.

வீட்டு வேலை லாபம் தரும் தொழிலாக்க செயற்பாடா, இல்லையா என்பது பற்றிய கோட்பாட்டு ரீதியான ஆய்வுகளுக்குப் புறம்பாக, இந்த ஊழியம், உண்மையில் ஆக்கபூர்வமான தொழிற்பாடு என்பதைக் கண்டுகொள்வதற்கு வேறு வழிகள் இருக்கின்றன. உதாரணமாக, பெண்கள் தமது வீட்டுச் செயற்திறனை தொழிற் சந்தைக்கு எடுத்துச் செல்கிறார்கள் எனவைத்துக்கொள்வோம். தொழிற் சந்தையில் பெண்களின் வேலைக்கு ஊதியம் கிடைக்கிறது. ஒரு வர்த்தக நிறுவனம் அல்லது ஒரு அரசு தனது மூலதனத்தின் ஒரு பகுதியாக இந்த வேதனத்தை வழங்குகிறது. சமையற் தொழில், சலவைத் தொழில், குழந்தை பராமரிப்பு, சிறார் கல்வி என்ற ரீதியில் பெண்கள் வீட்டில் செய்யும் வேலைகளை சமூக சந்தைக்கு எடுத்துச்செல்லும்பொழுது, அந்த உழைப்பிற்கு பரிவர்த்தனை மதிப்பு இருப்பதால் ஊதியம் பெற்றுத்தரும் தொழிலாக அவை அமைகின்றன. இவ்வாறு, வீட்டில் பெண்கள் புரியும் வேலைகள் அனைத்துமே சமூகமயமாக்கப்பட்டால், அதாவது வீட்டு ஊழியம் சமூக ஊழியமாக மாற்றப்பட்டால், அந்தத் தொழிற்துறையைப் பேணி, நிர்வகிக்க ஒரு அரசுக்கு பெருந்தொகை நிதி செலவாகும்.

வீட்டு ஊழியம் என்பது லாபம் தரும் உழைப்பு சக்தியா, இல்லையா என்பது பற்றிய சர்ச்சைக்குரிய ஆய்வில் இறங்குவது இந்த நூலின் நோக்கமல்ல. எனினும் இந்த விவாதம் ஒரு உண்மையைப் புலப்படுத்திக் காட்டுகிறது. அதாவது, வீட்டு வேலையானது சமூகத்தில் ஒரு முக்கிய பொருளாதாரப் பங்கை வகிக்கிறது என்பதாகும். பெண்களின் உழைப்பு சக்தியின் வெளிப்பாடாக வீட்டு வேலையை நாம் இனம்கண்டுகொள்ள இந்த விவாதம் துணைபுரிகிறது. வீட்டு வேலை என்பது அர்த்தமற்ற, பெறுமாணமற்ற பெண்களின்

சமூகப் பங்கு எனக் கொள்ளமுடியாது. நாம் குறித்துக்காட்டிய உதாரணம் இதனைப் புலப்படுத்தும். வீட்டு வேலை என்பது ஊதியம் கொடுக்கப்படாத ஊழியமாக இருந்தபோதும் குடும்பத்தினதும் சமூகத்தினதும் பொருளாதார வாழ்விற்கு அது அத்தியாவசியமானது. எனவே, திருமணமாகிய பெண்கள் 'உழைக்கவில்லை' என்பதும், உழைப்பற்றவர்கள் என்பதால் குடும்ப நிதி நிலவரத்தை சரியீடுசெய்ய பெண்கள் சீதனம் வழங்கவேண்டும் என்பதும் மிகவும் தப்பான, கேலிக்கூத்தான கருத்தாகும். வீட்டு வேலையில், ஈடுபடும் பெண்கள் செயற்திறன்மிக்க உழைப்பாளிகள். அவர்களது உழைப்பு சக்திக்கு பெறுமாணம் இருக்கிறது. அந்தக் தொழிலாக்க சக்தியின் உண்மையான மதிப்பை சமூகம் உணர்ந்துகொள்ளவில்லை.

தமிழரின் சமூகக் கட்டமைப்பில், பல பொருண்மியத் துறைகளில், உதாரணமாக, விவசாயத்துறை, மீன்பிடித்துறை, பனம்பொருள் உற்பத்தித்துறை போன்றவற்றில் குடும்பத்திலுள்ள ஆண்களும் பெண்களும் ஒன்றுசேர்ந்து உழைக்கிறார்கள். சில குடிசைக் கைத்தொழில்களிலும் பெண்கள் வேலைசெய்து குடும்ப வருமானத்திற்கு பங்களிக்கிறார்கள். குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயுமாக, வீட்டில் ஊழியம் செய்தும் சமூக உற்பத்தித்துறையில் உழைத்தும், இரட்டை வேலைப்பளுவை இந்தப் பெண்கள் சுமந்துநிற்கிறார்கள். நகரப் புறங்களிலும், தாதிகளாக, ஆசிரியைகளாக, எழுத்தாளர்களாக, கடை உதவியாளர்களாக பெருந்தொகையில் பெண்கள் உழைக்கிறார்கள். ஆண்களைப் பொறுத்தவரை, நாளாந்த வேலை முடிவடைந்ததும் அவர்களது உழைக்கும் நேரமும் முடிவடைந்துவிடுகிறது. ஆனால் உழைக்கும் பெண்களின் நிலையோ வேறு. சமூக உற்பத்தியில் தமது நாளாந்த பகல் வேலையை முடித்துக்கொண்டு வீடு திரும்பியதும் பெண்களுக்கு வீட்டுவேலை காத்திருக்கிறது. சமைத்தல், வீடு சுத்தம்செய்தல், பிள்ளைகளைப் பராமரித்தல் போன்ற வீட்டு ஊழியம் என்ற வேலைப்பளுவையும் அவர்களே சுமக்கவேண்டியிருக்கிறது.

வீட்டுச் சூழலில் பெண்களால் செலவிடப்படும் தனித்துவமான உழைப்பு சக்தியை வீட்டு ஊழியம் என விளக்கினோம். இந்த வீட்டு வேலையில் முழுநேரத்தையும் செலவிடும் பெண்கள் இருக்கிறார்கள். அத்துடன் சமூக உற்பத்தி துறையிலும் வேலை செய்துகொண்டு வீட்டு வேலைப் பளுவையும் சுமக்கும் பெண்களும் இருக்கிறார்கள். எந்த வழியிலும், குடும்ப வாழ்வின் மேம்பாட்டிற்கு பெண்கள் செயற்திறனுடன் உழைத்துவருவதால், குடும்பப் பொருளாதாரத்திற்கு மூலதனமாக, பெண்கள் சீதனம் வழங்கவேண்டுமென கூறப்படும் வாதம் அபத்தமானது. அத்தோடு வேலை வாய்ப்பற்றிருக்கும் பெண்கள் குடும்ப நிதி நிலையை சரிசெய்வதற்கு சீதனம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தும் தவறானதாகும். வீடுகளில் பெண்கள் வேதனம்பெறாத தொழிலாளர்களாக இருந்தபோதும், அவர்களது உழைப்பு சக்தியானது குடும்ப வாழ்விற்கும் சமூகத்திற்கும் பயன்மிக்கதாகவே அமைகிறது.

## பெண்களும் தங்குநிலையும்.

தமிழ்ப் பெண்களின் தங்குநிலை வாழ்வானது நாம் அவதானிக்கக்கூடிய மிகவும் சோகமான சமூக மெய்யுண்மையாகும். இது பெண்களின் மனித வளர்ச்சியிலும் சமூக முன்னேற்றத்திலும் பாரதூரமாக தாக்கத்தை விளைவிக்கிறது. தனிப்பட்ட ரீதியில், இந்தத் தங்குநிலையானது பெண்களின் உணர்வுபூர்வமான, அறிவுபூர்வமான வளர்ச்சிக்கு குந்தகம் இழைப்பதுடன், சமூக ஒடுக்குமுறைக்கும் சுரண்டல் முறைக்கும் அவர்களை ஆளாக்கிவிடுகிறது.

# வெளிச்சம்

மனித வாழ்வின் சிக்கலான சவால்களுக்கு முகம்கொடுக்க திராணியற்றவர்களாகவும் அவர்களை ஆக்கிவிடுகிறது. சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில், பெண்களின் தங்குநிலையானது, பெண் வர்க்கத்தில் பொதிந்துகிடக்கும் பாரிய மனித வளத்தையும் ஆற்றலையும் மழுங்கடித்து சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டை போடுகிறது.

பெண்களின் தங்குநிலை என்பது சமூகப் பண்பாட்டு உலகினால் உருவாக்கம் பெறுகிறது. பெண்களை அறப்பண்பின் உன்னதமாக சித்திரிக்கும் கருத்துநிலையால் கட்டி எழுப்பப்படுகிறது. இதன்படி, தாய்மை, நல்லொழுக்கம், பணிவு போன்ற குணாம்சங்கள் பெண்களுக்கே உரித்தான அறநெறிப் பண்புகளாகக் கொள்ளப்படுகிறது. நாணம், பயம், மடமை, அடக்கம், கீழ்ப்படிவு போன்றன பெண்கள் ஒழுக வேண்டிய நன்நடத்தையாக, அதாவது 'பெண்மையின்' சாராம்ச இயல்புகளாக சித்திரிக்கப்படுகிறது. இவ்விதம் பண்பாட்டு உலகினால் உருவகிக்கப்படும் 'பெண்மை' என்ற கருத்துருவம், ஆணாதிக்க கருத்துலகிலிருந்து தோற்றம் கொள்கிறது. பெண்களை அடக்கி, கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு இந்தப் பார்வை அடிப்படையாக இருக்கிறது. பணிவையும், கீழ்ப்படிவையும் 'பெண்மையின்' உத்தம பண்புகளாகச் சித்திரிக்கும் இந்த ஆணாதிக்க கருத்துநிலை பெண்களை ஆண்களுக்கு அடிபணிந்து வாழ வழிசெய்கிறது. இந்தக் கருத்துநிலையானது ஆண்களின் நலன்களைப் பேணி, ஆணதிகாரத்தை வலுப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டது. இந்த ஆணாதிக்க பண்பாட்டு உலகிலிருந்தே தமிழ்ப் பெண்களின் தங்குநிலை தோற்றுவாய் கொள்கிறது.

பெற்றோரது உலகப் பார்வை சமூகத்தின் பண்பாட்டுக் கருத்துலகத்தால் நெறிப்படுத்தப்படுகிறது. குடும்ப சூழலில், பெற்றோரது கருத்துக்களால் வனையப்படும் பெண் குழந்தைகள், ஆழமாகப் புரையோடிவிடும் தங்குநிலையான மனோபாவத்தில் வளர்த்தெடுக்கப்படுகிறார்கள். இவ்விதம் பெண் பிள்ளைகளது மனம் பதனிடப்படும்வேளை, இன்னொரு புறத்தில் வித்தியாசமான சமூகமயமாக்கல் நிகழ்கிறது. அதாவது, பெண்களை பேணிக் காப்பதே தமது சமூகப் பங்கு என குடும்பத்தின் ஆண்களான தந்தையரும் சகோதரர்களும் எண்ணிக்கொள்கிறார்கள். இவ்விதம், சமூகப் பண்பாட்டு உலகம் இளம் பெண்களின் வாழ்க்கையைச் சுற்றி ஒரு பாதுகாப்பு அரணைக் கட்டி எழுப்பிவிடுகிறது. இறுதியில் தந்தையரே பெண் பிள்ளைகளின் பிரதான பாதுகாவலர் என்ற பங்கை பொறுப்பேற்கிறார். இவ்விதம் புறநிலைகளால் தங்குநிலையானது சமூக நடப்பியல் உண்மையாக உருவாக்கம்பெறுகிறது இந்த சமூகமயமாக்கல் காரணமாக, பெண்கள் தமது கீழ்ப்படிந்த நிலையையும் தங்குநிலையையும் தமது தலைவிதியாக நம்பிக்கொள்கிறார்கள்.

திருமணமாகாத இளம்பெண்கள் பெற்றோரில் சார்ந்து நிற்பதும் சீதன முறைமைக்கு ஒரு காரணியாக அமைந்துவிடுகிறது. தம்மீது தங்கிநிற்கும் பெண்பிள்ளைகளுக்கு பொருளாதாரப் பாதுகாப்பு அளிக்கும் வழிமுறையாக சீதனம் வழங்குவது தமது கடப்பாடு என பெற்றோர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். நிலையான பொருளியத் தளத்தில், தனிப்பட்ட குடும்ப வாழ்வை அமைத்துக்கொள்ள பொருளுதவி வழங்குவது தமது பெற்றோரின் கடமையென பெண்களும் நம்பிக்கொள்கிறார்கள். குடும்பத்தின் தங்குநிலையிலிருந்து விடுபட்டு, தமது பொருளாதாரப் பாதுகாப்பையும், சுய – கௌரவத்தையும் நிலை

நாட்டிக்கொள்ள சீதனம் ஒரு வழியென இளம்பெண்கள் கருதுகின்றார்கள்.

சீதன நடைமுறை தொடர்ந்தும் நீடிப்பதற்கு பெண்களும் கருவியாகச் செயற்படுகிறார்கள் என்ற சமூக நோக்கு, தங்குநிலைச் சூழலிலிருந்தே எழுகிறது. மணப்பெண்ணிடமிருந்து சீதனத்தை பேரம்பேசி வாங்குவதில் ஆண்பிள்ளைகளின் தாய்மாரே முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்ற கருத்து பரவலாக உள்ளது. மணப்பெண்ணாக இருக்கும் வேளையில் சீதன அழுத்தங்களுக்கு இலக்காகும் கசப்பான அனுபவத்தைப் பெற்றும்கூட சீதன நடைமுறையின் இழிநிலைபற்றி பெண்கள் விழிப்புக்கொள்ளவில்லை. தாய்மார்களும் சமூகப் பண்பாட்டு உலகத்து அழுத்தங்களுக்கு ஆளாவதால் இதுபற்றி ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. பாலின அடிப்படையில் பெண்களது நிலையுடன் தம்மை இனம்காண்பதைவிட, தாய் என்ற சமூக நிலையிலிருந்து தமது பிள்ளைகளின் நலனைப் பேணுவது தாய்மாருக்கு முக்கியமானதாகத் தென்படலாம். எனினும், தமது ஆண்பிள்ளைகளின் வாழ்க்கைத் துணைவியராக வரப்போகும் மணப்பெண்களிடம் வரதட்சனைக்கு வாதாடுவது ஒரு விடயத்தைப் புலப்படுத்துகிறது அதாவது, பெண்ணினம் தனது ஒடுக்குமுறையான வாழ்நிலைபற்றி இன்னும் விழிப்புக்கொள்ளவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இதன் அடிப்படையில் பார்க்கும்பொழுது தாய்மார்கள் என்ற பெண்கள், மருமகள்மார் என்ற பெண்களின் மதிப்பை, சீதனப் பெறுமானத்திலிருந்தே எடைபோடுகிறார்கள் எனக் கொள்ளலாம். தமது ஆண் பிள்ளைகளின் பொருளாதார நலனில் தாய்மார் அக்கறைகாட்டுவதற்கு வேறு காரணமும் உண்டு. அதாவது, கணவனை இழந்து விதவையாக மாறும் சூழ்நிலை எழும்பொழுது, ஒரு பெண்ணானவள், தனது இறுதிக்கட்ட தங்குநிலையாக, தனது ஆண் மகனிடமே பராமரிப்பைத் தேடிக்கொள்வதுமுண்டு. இந்த நிலையில், பொருளாதாரப் பலமுடைய மகனே தனது வயோதிபத் தாயை அரவணைத்துப் பராமரிக்க முடியும்.

யாழ்ப்பாண சமூகக் கட்டமைப்பில் பெண்களின் தங்குநிலைபற்றி மிகவும் சுருக்கமாகப் பார்த்தோம். சீதன நடைமுறை தொடர்ந்து நீடிப்பதற்கு பெண்களின் தங்குநிலையான வாழ்வும் ஒரு காரணம் என்பதையும் சுட்டிக்காட்டினோம். சமூக ஒடுக்குமுறைபற்றிய அறியாமையும், பிறரில் தங்கிவாழும் அங்கலாய்ப்பும், ஒன்றிணைந்துகொள்ளும் ஒரு சிக்கலான சமூக சூழலில் வாழும் பெண்கள், சில சமயங்களில், தம்மை இழிவுபடுத்தும் சீதன நடைமுறை நீடிப்பதற்கு தம்மையறியாமலே உதவிபுரிந்து விடுகிறார்கள்.

(தொடரும்)

## உசாத்துணை

(8) *LENIN. V.I 'Women in struggle for socialism', THE WOMEN QUESTION. page 17.*

(9) *For detail account of the debate see, BRYSON. V. 'MODERN MARXISM AND SOCIALIST FEMINISM' IN feminist political Theory: An Iutroduction. page 239. A. HEITLINGER 'A MARXIST THEORY OF DOMESTIC LABOUR AND REPRODUCTION OF LABOUR POWER, in WOMEN AND SOCIALISM, page 24.*

தைப்பனி தலைப்பனியென்றும், மாசிப்பனி மூசிப் பெய்யும் என்றும் சொல்வார்கள். தைக்கடைசியில் மழை ஒய்ந்து, நிலம் உலர்ந்து விடும். வெயில் தணலாய் எறிக்கும். இரவில் பனி கொட்டித் தள்ளும். பல்லும் பல்லும் நெருடுபடுவதாய் குளிர் அடிக்கும். பாயில் சுருண்டு கிடப்பதே இதமானது. விடிந்து சூரியன் முகத்தில் அடிக்கும் போதே எழுந்திருக்க மனம் ஆவல் படும்.

முழ வேட்டி. அதை இழுத்துச் செருகியிருப்பார். அதற்குள் கொட்டப்பெட்டி இருக்கும். கொட்டப்பெட்டிக்குள் வெற்றிலை, பாக்கு, பாக்கென்றால் நாறல் பாக்கு, பிஞ்சுப்பாக்கு, சீவப்பட்ட தூள் பாக்கு, சிராய்ப்பாக்கு எல்லாம் தான். பொயிலை, சுண்ணாம்பும் இருக்கும்.

சீனியண்ணர் வெற்றிலை சப்புவது அலாதியானது. வெற்றிலையை எடுத்து பின்புறமாகச் சுண்ணாம்பு தடவுவார்.




சு. சங்கிலிகுமாரன்

ஆனால், அது நடப்பதில்லை. நடுச்சாமத்திலேயே குரல் கொடுத்துக் கொண்டு வந்து விடுவார்கள். நாற்சாரத் திண்ணைகளில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் சோம்பல் முறித்து எழும்புவார்கள். இப்படியே ஏழெட்டுப் பேர் ஒன்றாகினால், நேரே தோட்டத்துக்கு நடக்கலாம். சீனியண்ணர்தான் முதலில் எழும்புவார். உச்சியில் பூரணை நிலவு நிற்கும் வேளைதான் அவர் கண் விழிக்கும் நேரம். எந்தக் குளிரிலும் வெறும் மேலுடன் நடப்பார். நாலு

பிறகு காம்பையும் நுனியையும் கிள்ளியெறிவார். வெற்றிலையில் காம்பிலும் நுனியிலும் விசமிருக்கிறது என்பது அவர் கருத்து. அதன்பின் தூள் பாக்கை மூக்கருகே கொண்டு சென்று மணந்து விட்டு, வாய்க்குள் போடுவார். பின்னர் வெற்றிலையை உட்பக்கமாக இரண்டாக மடித்து, பிறகு அதை நான்காக, எட்டாக மடித்து வாய்க்குள் போடுவார். இரண்டு மூன்று தரம் அசை போட்டபின் பிஞ்சுப்பாக்குப் போடுவார். பிறகு கொஞ்ச நேரம் கழிய

நாறல் பாக்குப் போடுவார். சிராய்ப் பாக்குத்துண்டையும் போடுவார். இறுதியாக பொயிலை போடுவார். அரைமணி நேரம் அவரது வாய்க்குள் வெற்றிலை புரள் படும். நடுச்சாமத்தில் பொயிலைச் சுத்தொன்றை மூட்டிக் கொண்டு வந்து ''எம்படா......... எம்படா'' என்று குரல் கொடுத்தால், அது சினியண்ணர்தான். இப்படி ஒவ்வொருவரது குரலிலும் பேசி ஆட்களை எழுப்பச் செய்வது கைரகப் பேயின் குணமாம். ஊரில் இப்படிப் பேய்க் கதைகள் பல உண்டு.

அதனால் சினியண்ணர் குரல் கொடுத்தாலும் ஒருவரும் எழும்பமாட்டார்கள். புறுபுறுத்தபடி வந்து ஒவ்வொருவராகத் தட்டி எழுப்பிவிடுவார் அவர். அதன் பிறகே ஒவ்வொருவராக எழுந்து பட்டைகளை எடுத்துக்கொண்டு புறப்படுவர்.

பனி சொட்டும் அந்தச் சாமத்தில் துலாமிதிப்புத் தொடங்கும். சினியண்ணர் நாலுமுழத் துண்டை அவிழ்த்து ஆடுகாலில் போட்டுவிட்டு கச்சையுடன் துலா ஏறுவார். மற்றக் கிணற்றில் தம்பிப்பிள்ளை துலா மிதிப்பார். வேறிருவர் பட்டையால் இறைப்பார்கள். இன்னுமிருவர் தண்ணி கட்டுவர்.

சினியண்ணரும் தம்பிப்பிள்ளையும் துலா மிதிப்பதில் விண்ணர்கள். தாளம் போட்டுக் கொண்டு, அவர்களின் கால்கள் துலாவில் ஏறி இறங்கும். அதே நேரம் தேவார திருவாசகங்களையும் காத்தான் கூத்துப் பாடல்களையும் இசை கூட்டிப் பாடுவதில் சமர்த்தர்கள்.

இறைப்புத் தொடங்கி கொஞ்ச நேரம் கழிய ''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே......'' எனச் சினியண்ணர் இந்தத் துலாவில் நின்று ஆரம்பிப்பார். அதைத் திரும்ப - ஒரு இழுவை இழுத்துப் பாடுவார் தம்பிப்பிள்ளை மற்றத்துலாவில் நின்று.

சாமக் கோழி கூவி, அதன்பின் பறவைகள் ஆர்ப்பரித்துக் கத்தி, சூரியன் பனிமூட்டத்தை ஊடறுத்துக் கதிர்களைப் பாய விடும் நேரம் இறைப்பு அரைவாசி தாண்டி விடும்.

காலையில் பழந்தண்ணி கொண்டு வருவார்கள். கயிற்றுக் கைபிடியில் பிடித்துக் கொண்டு முட்டியை எடுத்து வருவது துலா மிதிப்பவர்களுக்குத் தெரியும். உடனே பட்டை இறைப்பு நிற்கும் கடைசியாக கோலிய தண்ணீரை எடுத்து, வாயைக் கொப்பளித்து முகம் கழுவுவார்கள்.

முட்டி ஆடுகாலின் கீழ் வைக்கப்படும். முட்டியை மூடியிருந்த சிரட்டைகளை ஒவ்வொருவரும் தூக்குவர். முட்டியைச் சரித்து ஊற்றும் போதே பழந்தண்ணியின் வாசம் மூக்கிலடிக்கும். செல்லத்தம்பி பழந்தண்ணியை உறிஞ்சி உறிஞ்சிக் குடிப்பார். வாழையிலையில் கோலிக் குடிப்பதே தம்பிப்பிள்ளைக்குப் பிடித்தமானது.

பழந்தண்ணிதான் முதல் ஆகாரம். இரவு சோற்றுக்குத் தண்ணீர் ஊற்றி வைப்பார்கள். விடிய அது ஊறிப் புளித்து, சுவையூட்டி நிற்கும். ஆதற்குள் உப்பு, வெங்காயம், மிளகாய் சேர்த்து, நன்றாக கரைத்தால் வருவது பழந்தண்ணி. அது தான் தேசிய பானம். உடற் சூட்டுக்கு நிவாரணி. உடலைக் குளிர்மையாக வைத்திருக்கும் தன்மை கொண்டது. பழந்தண்ணி குடித்ததும் உடலில் களையெல்லாம் பறந்துவிடும். வெயில் சூட்டுக்கு இதமளிக்கத் தொடங்கும்.

பிறகு மீண்டும் துலாமிதிப்பு தொடங்கும்.

ஒரு நாள் ....... சீனியண்ணர் துலா மிதித்துக் கொண்டிருந்தார். அன்றைக்கு தண்ணி கட்ட சின்னத்தம்பி வந்திருந்தான். சீனியண்ணர் என்றால் அவனுக்குப் பயம். இடையில் தண்ணீர் கட்டாமல் பிராக்குப் பாத்தாலே அடித்துப் போடுவார். அன்றைக்கு அவனுக்கு வெளிக்குப் போக வேண்டும் போலிருந்தது. அடக்கி அடக்கிப் பார்த்தான். சரி வரவில்லை. இருட்டு இருந்தது. அவன் யோசித்தான். பிறகு தனது தலைப்பட்டையை வைத்து நாலு முழத் துண்டையும் மண்வெட்டியில் சுற்றி விட்டு, வடலிப் பக்கம் போய்விட்டான். தண்ணீர் பாத்திகளை உடைத்துப் பாய்ந்தது என்ன செய்வது?

ஒரு 'படியாகத் தண்ணி இறைச்சாச்சுது பின்னேரம் தோட்டத்தை வந்து பார்த்தபோதுதான் சீனியண்ணர் ஓடி முழித்தார். அதன் பிறகு சின்னத்தம்பியைத் தேடிப் போனார். (வரும்)

◻◻

- கொட்டப்பெட்டி – பணம், வெற்றிலை போன்ற வற்றை வைப்பதற் கென பனை ஓலையால் இழைக்கப்பட்ட ஒரு பை.
- நாறல் பாக்கு – நீருள் ஊறவைத்து பதப்படுத்திப் பயன்படுத்தப் படும் வாசனை மிக்க பாக்கு.
- சிராய்ப்பாக்கு – சற்று முற்றிய பாக்கு.
- பொயிலைச்சுத்து – சுருட்டு.
- பிராக்குப்பாத்தல் – புலனை வேறிடத்தில் செலுத்துதல்.
- வெளிக்குப் போதல் – மலங் கழிக்கச் செல்லுதல்.


- பலசரக்குப் பொருட்களா?
- பால்மா வகையா?
- பாடசாலை உபகரணங்களா?
- மளிகைப் பொருட்களா?

எவை தானில்லை இங்கு

**உங்கள் தேர்வு எதுவும் எங்களிடமுண்டு.**

**வே. சி. ம. களஞ்சியம்**

**மானிப்பாய்**

# ஈழத்தமிழர் வரலாறு

## 6

*'ஈழத்தமிழர் வரலாறு' என்ற பொருளில் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரட்ணம் அவர்கள் எழுதும் கட்டுரை வெளிச்சம் இதழில் தொடராக வருகிறது. இந்தத் தொடரின் தொடர்ச்சி இந்த இதழில் பிரசுரமாகிறது.*

ப.புஷ்பரட்ணம்

பாளி இலக்கியங்கள் சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவில் இருந்து புலம் பெயர்வதற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்தவர்களை நாகரீக மற்ற இயக்கர், நாகர் எனக் கூறுகின்றன. வரலாற்றாசிரியர்கள் சிலர் நாகர்களைத் தமிழர்களாகவும், இயக்கர்களைச் சிங்கள வர்களாகவும் அடையாளம் கண்டுள்ளனர். ஆனால் நாகர்களை குறிப்பிட்ட ஒரு மொழி பேசிய இனமாகவோ, குறிப்பிட்ட ஒரு சமூகமாகவோ இலங்கையில் இனங் காண்பதற்கு வரலாற்றுத் தொடக்க காலத்தில் தெளிவான சான்றுகள் காணப்படவில்லை. நாகர்களைப் பற்றிய குறிப்புக்கள், இலங்கையில் மட்டுமன்றி ஆசியாவின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்றன. இந்திய இலக்கியங்களில் இப்பெயர் அரசர்களைப், புலவர்களை சாதாரண மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் வரலாற்றுக்கால நகரங்கள், இராசதானிகள் நாக இனமக்கள் வாழ்ந்ததை நினைவுபடுத்தும் வகையில் பெயரிடப்பட்டுள்ளதை இன்னும் காணமுடிகிறது. இலங்கையில் நாகர்களைப் பற்றிய குறிப்புகள் பாளி இலக்கியங்களில் மட்டுமன்றி பிராமிக்கல்வெட்டுகளிலும் செறிவாக காணப்படுகிறது. இப்பெயர் அரசர்களையும் சிற்றரசர்களை மட்டுமன்றி சமூகத்தின் பலதரப்பட்ட மக்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு நாக எனத் தொடங்கும் பெயர் தமிழ் சிங்கள மக்களிடையே பொது வழக்கில் இருந்தமை காரணம் எனலாம்.

# வெளிச்சம்

இலங்கையில் பௌத்தமதம் செல்வாக்குப் பெறமுன்னர் நிலவிய இந்து மதத்தில் நாகவழிபாடு முக்கிய அம்சமாக இருந்தது. ஆனால் பௌத்தம் பரவிய பின்னர் இவ்வழிபாடு இந்துமதத்தில் மட்டுமன்றி பௌத்த மதத்திலும் செல்வாக்கு செலுத்தியது. இதனால் பௌத்த வழிபாட்டுச் சின்னங்களுடன் நாக உருவங்களும் முக்கிய தெய்வ உருவமாக வைத்து வழிபடப்பட்டது. இவ்வாறு நாக தெய்வம் பௌத்த, இந்து மதங்களுக்குரிய பொது வழிபாடாக ஆதியில் இருந்ததினால் இம்மதங்களுக்குரிய தமிழ், சிங்கள மக்கள் தமது வழிபாட்டுக்குரிய தெய்வத்தை முதன்மைப்படுத்தும் நோக்கில் தமது பெயர்களுடன் நாக என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர். ஆயினும் காலப்போக்கில் நாகவழிபாடு தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்றதினால் நாக என்ற பெயர் தமிழ் மக்களின் பெயர்களிலும், அவர்கள் வாழ்ந்த இடப்பெயர்களிலும் கூடுதலான செல்வாக்குப் பெற்றதை வரலாற்று ரீதியாக காணமுடிகிறது.

பாளி இலக்கியங்கள் அநுராதபுரத்திற்கு வடக்கிலமைந்த தமிழர் பிராந்தியத்தை நாகதீபம் எனவும் 10 ஆம் நூற்றாண்டின் பின்னர் உத்தரதேசம் எனவும் கூறுகின்றன. மகாவம்சம் புத்தர் தனது இரண்டாவது விஜயத்தின் போது நாக தீபத்தை ஆட்சி செய்த இரு மன்னர்களிடையே ஏற்பட்ட போராட்டத்தை சமாதானமாக தீர்த்து வைத்ததாகக்கூறுகிறது. புத்தர் வருகை பற்றிய கதை ஒரு ஐதீகமாக இருப்பினும் இந்நூல் எழுதப்பட்ட கி. பி. 6ஆம் நூற்றாண்டில் தமிழர் செறிந்து வாழ்ந்த பிராந்தியம் நாகதீபம் என அழைக்கப்பட்டதையும் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போல் இங்கும் அரச மரமொன்று தோன்றி வளர்ந்ததையும் இதன் மூலம் உணரமுடிகிறது. இதற்கு மேலும் சான்றாக வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனத்தில் இப்பிராந்தியம் நாக தீபம் எனவும், கி பி. 2ஆம் நூற்றாண்டுக்குரிய தொலமியின் குறிப்பில் நாகதீபோய் எனவும், மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் நாகநாடு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமையை இங்கு குறிப்பிடலாம். இத்தகைய ஒரு பெயர் இப்பிராந்தியத்திற்கு ஏற்பட்டமைக்கு இங்கு வாழ்ந்த மக்களிடையே நாகவழிபாட்டு மரபு ஆதியில் இருந்தமை காரணம் எனலாம். இன்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒரு இடம் நாச்சியமார் மலை என அழைக்கப்படுகிறது. இப்பெயர் பிற்காலத்திலோ அல்லது தற்செயலாகவோ ஏற்பட்ட ஒன்றல்ல. இப்பெயருக்கு 2000 ஆண்டுகால வரலாறு உண்டு. இப்பெயரின் மூலம் 2100 வருடங்களுக்கு முன் இங்கு வாழ்ந்த நாகர் என்ற மக்கள் குடியிருப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட தென்பதை பிராமிக்கல்வெட்டில் வரும் இடப்பெயரை அடிப்படையாக கொண்டு பேராசிரியர் பரணவித்தானா நிறுவியுள்ளார். இன்று தமிழர்கள் பிராந்தியத்தில் நாகமுனை, நாகபடுவான், நாகர் கோயில் போன்ற இடப்பெயர்கள் பல உள்ளது. இப்பெயர்கள் நாகவழிபாட்டு நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றிய புராதன இடப் பெயர்களாக இருக்கலாம் என்பதை இவ்விடங்களில் கிடைத்துள்ள தொன்மையான தொல்லியற்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

பாளி இலக்கியங்களிலும், பிராமிக்கல் வெட்டுகளிலும், அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் சிலருக்கும், அக்கால மக்களுக்கும் உரிய பெயராக துல்லத்தநாக, கல்லத்தநாக, மகாநாக, ஈழநாக, மகல்லகநாக, குஜ்ஜநாக, குஞ்சநாக, ஸ்ரீநாக, கபதிநாக, பருமகநாக, பரதநாக, நாக, நாகுலி, கமணிநாக, நாகசேன, நாகலி, நாகராகி முதலான பெயர்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் இப்பெயர்கள் தமிழ், சிங்கள மக்களுக்கு பொதுவானதாக இருந்

திருப்பினும் பிற்காலத்தில் இப்பெயர்கள் சிங்கள மக்களிற்கிடையே செல்வாக்கிழந்து போக தமிழ் மக்களிடையே செல்வாக்குடன் விளங்குவதை இன்னும் நடைமுறையில் பயன்படுத்தப்படும் நாகன், நாகி, நாகம்மாள், நாகமணி, நாகமுத்து, நாகலிங்கம், நாகநாதன் ஆகிய ஆட்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன. இவை 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்று மரபு இலங்கைத் தமிழருக்கு இருந்தற்குச் சான்றாகும்.

சங்க காலத்தில் தமிழகத்தில் வடுகர் என்றொரு சமூகம் வாழ்ந்தது பற்றி பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இத்தகைய ஒரு சமூகம் இலங்கையில் வாழ்ந்ததற்குப் பிராமிக் கல்வெட்டுகளில் இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் மகாவம்சம் வடுகன் என்ற தமிழன் கி. மு. 1ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்ததாகக் கூறுகிறது. தலைநகரில் தச்சுவேலையில் ஈடுபட்ட இத்தமிழ் வடுகன் அப்போது சிவன் மன்னனின் அரசியாக இருந்த அனுலாதேவியை திருமணம் செய்து ஒரு வருடம் இரண்டு மாத காலத்திற்கு ஆட்சி செய்தான் என இந்நூல் கூறுகிறது. பெயரடிப் படையில் சங்ககால வடுகர் சமூகப் பெயரை இம்மன்னனின் பெயர் ஒத்திருப்பதால் இப்பெயர் குறிப்பிட்ட ஒரு சமூகத்தைக் குறித்தா? அல்லது தனிநபருக்குரிய பெயரா? என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

சங்ககாலச் சமூக அமைப்பில் பல்வேறு சமூகப் பிரிவுகளுடன் தமிழகத்தில் ஆட்சி புரிந்த சேர, சோழ, பாண்டிய அரசவம்சங்களும், இவர்களிக்கு திறை செலுத்திய பல சிற்றரசர்களும் உள்ளடங்குகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் சமகாலப் பிராமிக் கல்வெட்டுகளில் இவ்வம்சப் பெயர்கள், இவர்களைக் குறிக்கும் சிறப்புப் பெயர்கள் செறிந்து காணப்படுகின்றன சமகாலத்தில் இதையொத்த பெயர்கள் இலங்கையிலும் இருந்ததைப் பாளி இலக்கியங்களில் ஆங்காங்கே காண முடிகிறது. ஆனால் இவர்களை இந்நாட்டோடு தொடர்பு படுத்தாது அவ்வப்போது அயல் நாட்டிலிருந்து படையெடுத்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் என இந்நூல்கள் கூறுகின்றன. ஆனால் இலங்கையிற் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகளை ஆராய்ந்தால் தமிழகத்தில் கிடைத்த கல்வெட்டுகளை விடக் கூடிய அளவிற்கு சங்க கால சேரமன்னர்களைக் குறிக்கும் உதி, பாண்டியரைக் குறிக்கும் மாறன், பழையா, பண்டு சோழரைக் குறிக்கும் சோடா போன்ற பெயர்கள் இருப்பதினைக் காண முடிகிறது. அப்பெயர்களைக் குறிக்கும் கல்வெட்டு தனியொரு நபரை மட்டும் குறிப்பிடாது அந்நபருக்குரிய குறுகிய கால (இரண்டுமூன்று தலைமுறை) வம்ச வரலாற்றையும் கூறுகிறது. அவ்வாறு கூறப்பட்டுள்ள நபர்கள் சிற்றரசர்களாக நிலக்குழுத் தலைவர்களாக, பிரபுவாக சமூகத்தில் உயர் நிலையில் மதிக்கப்பட்டனர். இப்பெயர்கள் தமிழ் அரசவம்சங்களைச் சார்ந்ததென சாசனவியலாளர் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர். ஆனால் இப்பெயர்களால் அறியப்படும் தமிழ் சமூகத்தின் தொன்மை தமிழரின் செறிவு, நாட்டுரிமை என்பன பற்றி பாளி இலக்கிய மனோபாவத்தில் இருந்து விலகி ஆராயமுற்பட்டதாகத் தெரியவில்லை

ஆகவே கல்வெட்டுக்களால் அறியப்படும் தமிழ்ப் பெயர்களை நோக்கும் போது சங்காலத்தை ஒத்த சமூக அமைப்பொன்று இலங்கையிலும் இருந்தமை தெரிய வருகிறது. பௌதிக அடிப்படையில் இலங்கை தனிப்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்தாலும் பண்பாட்டால் அது தமிழகத்துடன் பண்டுதொட்டு நெருங்கிய தொடர்பு கொண்டு வளர்ந்து வந்துள்ளது. பௌத்த மதத்தின் வருகை தமிழகத்துடன் ஒத்த இலங்கையின் பொதுப் பண்பாட்டில் மத அடிப்படையில் இருவேறுபட்ட பண்பாடு தோன்றி வளரக் காரணமாயின. இவ்விரு பண்பாட்டு வளர்ச்சியிலும் தமிழகத்தின்

செல்வாக்கு கூடிய தாக்கத்தினை ஏற்படுத்தின. இதில் இலங்கைத் தமிழரின் பண்பாடு தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வளர்ந்தது. அந்த தொடர்பின் விளைவே சங்க கால சமூக அமைப்பு இலங்கையிலும் தோன்றி வளரக் காரணமாயின. சங்க கால அமைப்பில் மருமகன், சகலன் போன்ற உறவுமுறைகள் இருந்ததை இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இத்தகைய உறவுமுறை இலங்கையிலும் இருந்ததை திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுரம், குருநாகல், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்த ஒற்றுமை பாளி இலக்கியங்கள் கூறுவது போல், அல்லது வரலாற்றாசிரியர்கள் விளக்கமளிப்பது போல் தமிழர்கள் அயல் நாட்டிலிருந்து வர்த்தகராக, ஆக்கிரமிப்பாளராக வந்து இலங்கையில் குடியேறியதைச் சுட்டி நிற்கவில்லை. மாறாக பரம்பரையாக இந்த நாட்டில் வாழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றது. நாம் முன்னர் குறிப்பிட்டது போல் சேர, சோழ, பாண்டிய வம்சங்களைக் குறிக்கும் பல்வேறு கல்வெட்டுகள் இலங்கையின் பல்வேறு இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. உருகுணையில் கண்டுபிடிக்கப்பட்ட பத்துக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த பலரின் பெயர்களைச் சுட்டி நிற்பதோடு அக்கல்வெட்டுக்களில் பாண்டியரின் இலட்சனையான மீன் பன்னிரண்டு இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை பற்றி ஆராய்ந்த மயிலை சீனிவேங்கடசாமி இக்கல்வெட்டுக்கள் பாண்டிய வம்சத்தின் தொடர்பு இங்கிருந்ததை உறுதிப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். இத்தொடர்பு பாண்டியர் தமிழ் நாட்டிலிருந்து இங்கு புலம்பெயர்ந்ததைக் குறிக்கவில்லை. மாறாக இங்கு வாழ்ந்த தமிழர்கள் தமிழ் நாட்டுடன் கொண்டிருந்த பண்பாட்டுத் தொடர்பால் அங்கிருந்த அரசவம்சங்களுக்குரிய பெயர்களைத் தாமும் சூடிக் கொண்டனர் எனக் கூறுவதே பொருத்தமாகும். தென்னிந்தியாவில் கூட மூவேந்தரது ஆட்சி பரவிய இடங்களில் தோன்றிய புதிய வம்சங்கள் தம்மைச் சேர, சோழ, பாண்டிய வம்சத்தவர் என அழைத்துக் கொண்டதை இங்கு நினைவுபடுத்தலாம். எனவே இலங்கையில் கிடைத்த தமிழ் சமூகம், அரசவம்சங்கள் தொடர்பான கல்வெட்டுகள் இங்கு வாழ்ந்த தமிழர்களைக் குறித்ததெனலாம். இந்த அரசவம்சங்களுக்கும் இங்கு ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களுக்கும் இடையிலான தொடர்பு ஆராயத்தக்கது.

(தொடரும்)

**கலை இலக்கிய படைப்பாளிகளே!**

*வெளிச்சத்தின் நான்காம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழை விரைவில் வெளியிடும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதிக பக்கங்களில் வெளிவரவிருக்கும் சிறப்பிதழுக்கு சிறுகதைகள், கவிதைகள், கலை. இலக்கியக் கட்டுரைகள் மற்றும் விமர்சனக் கட்டுரைகளைக் காலந் தாழ்த்தாது எமக்கு வழங்கி ஒத்துழைக்கும்படி கேட்கின்றோம்.*

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

வெளிச்சம், விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்,
நடுவப்பணியகம், கோண்டாவில்.

## வெளிச்சம்

குறுநாவல்

# பறக்கும் நினைவுகள்

சாந்தன்



விமானங்கள் எப்போதும் கனவில் வந்தன. சின்ன வயதில் அல்ல. பிறகுதான். உண்மையில் ஏழெட்டுத் தடவை விமானப்பயணங்கள் செய்ததன் பிறகுதான் அவை கனவில் வர ஆரம்பித்தன. இன்னும் சரியாய்ச் சொன்னால், விமானங்களின் அட்டூழியங்களை அறிய நேர்ந்ததன் பிறகுதான் அவை வந்தன. ஆனால் எல்லாம் சந்தோஷமான கனவுகள். வியப்பாகத்தானிருந்தது.

கனவுகளில், கடல் அலைகள், வண்ண மீன்கள் இவைகளும் முன்னர் அடிக்கடி வந்தன. பிறகு. இந்த விமானங்களும். அது ஒரு ஆச்சரியந்தான். அப்படி அதிகமாக அவை வந்தன. நித்திரை சுகமாக இருந்தது. விழிக்கிறபோதுகளில் லேசான ஏக்கம் வரும். அந்தக் கனவுகளை யாருக்கும் சொல்வதில்லை. புளுகுவதாக நினைப்பார்கள். அதோடு, ஏன் சொல்லவும் வேண்டும்? கனவுப் பலன்களிலும் நம்பிக்கை கிடையாது. அது எங்களது பழைய பலன்களோ, அல்லது ஃபிராய்டின் வாரிசுகள் கூறுகிற விளக்கங்களோ— எதுவானாலும். தன்னைப் பொறுத்தவரை கனவின் பலன், ஒன்றில் நித்திரையைச் சந்தோஷமாக்குவது அல்லது குழப்புவது. அவ்வளவுதான். இந்தக் கனவுகளெல்லாம் நித்திரையைச் சந்தோஷமானதாக்கின.

கடல் அலைகள், சிலிர்க்கப் பண்ணுவனவாயிருந்தன. பயமே தரவில்லை. எந்தளவு பெரிய அலைகள்! நடுக்கடல். சமுத்திரம். கரையே தெரியாமல் வானமுங் கடலும் கலந்த மாதிரி—நடுவில் ஒரு பெரிய கோவில். கற்றளி. இலங்கையில் அந்தமாதிரி இல்லை. மகாபலிபுரம் போனபோது பார்த்த மாதிரி இருந்தது. ஆனால் அதுவல்ல. அதனிலும் வலுபெரியது. கோபுரம் உயரம். கோபுரவாசல் வரை அலைகள் அடித்தபடி இருக்கின்றன. கலசங்களை நனைக்கிற மாதிரி அவை வளைந்து எழுகின்றன. தூவானமாய்த் தெறிக்கிற துமிகள். மிதக்

கிற மாதிரி அந்தப்பெரிய கோவில் மட்டும் கடல் நடுவில். வேறு நிலம் கிடையாது. பிரகார மதில்களையும் கடல் ஓயாது வருடுகிறது. கோபுர வாசலைக் கடந்து உள்ளே போவது வரைதான் கனவு. நனைந்து சிலிர்த்தபடி பார்த்தால் விசாலமாய் இருக்கிறது. ஆட்களில்லை. ஓங்கார இரைச்சல் மட்டும் உள்ளே. அந்தப் பிரமாண்டத்தைப் பார்க்கிற பிரமிப்புடன் கனவு முடிந்து விடுகிறது. காணுகிற வேளைகளிலெல்லாமே அதே மாதிரித்தான்.

மற்றக்கனவிலும் அலை வந்தது. கைதடிப் பாலத்தருகில் நடுத்தெருவில் ஆளுயர அலை வந்து வந்து மோதிற்று. ஓயாமல் அடிக்கிற அலை. ஆனால், தெருவால் போக முடிகிறது. அலை நனைக்கும்; அவ்வளவுதான். நனைய நனைய சந்தோஷம்.

விமானக் கனவுகள் தான் விசித்திரமானவை. எத்தனை விதமான விமானங்கள், எத்தனை விதமான பறப்புகள். அநேகமாய் எல்லாமே தரையிலிருந்து எழும்புகிற மாதிரி அல்லது இறங்கப்போகிற மாதிரி. நிலத்திற்கு வலு கிட்ட. ஒரு பனை, இரண்டு பனை உயர மட்டில் தெரிகிற விமானங்கள். உள்ளே இருப்பவர்களையெல்லாம் வடிவாகத் தெரியும். ஆட்களை நன்றாகப் பார்க்க முடிந்தது. அடையாளந் தெரிந்தது. இறங்கத் தயாராய் வட்டமிடுகிற விமானங்கள் அதிலிருக்கிறபோது நிலத்திலிருப்பவர்கள் அப்போதே கையசைக்கத் தொடங்கி விடுவார்கள். உண்மையான விமானங்களிலும் பார்க்க, இந்தக் கனவு விமானங்களின் உள்ளே இன்னமும் விசாலமாயிருந்தது. இயந்திர இரைச்சல்கள் பெரிதாக இருப்பதில்லை. சில சமயங்களில் கேட்பது கூட இல்லை. கிளைடர்கள் மாதிரியோ

இப்படி எத்தனை வந்தன! கார்போல இருக்கும். ஆனால் பறக்கும். ஒரு முறை, ஒரு வெறும்பெட்டி பென்னம் பெரிது, மரந்தான்-தொட்டி போலிருந்தது. உள்ளே ஆட்கள் நின்று நெஞ்சளவு தடுப்புக்களைக் கையால் பற்றிய வாறு வெளியே வடிவாகப் பார்த்தபடி நிற்கிறார்கள். பல்கனி மாதிரி. மேலே ஒன்றுமில்லை. திறந்த பெட்டி. அது எழும்பிப் பறக்கத் தொடங்கிற்று. நானும் அதில் சுவரைப் பற்றியவாறு.

கொழும்புப் பயணம் முன்பு கொஞ்சக் காலம் பஸ்களில் நடந்தது. ரயில் போக்கு வரத்து இல்லாமற் போய் பஸ் ஓடிற்று. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை பஸ்ஸில் போய், பிறகு அங்கிருந்து ரயிலில் போனார்கள். ஆனால், நேரே ஒரேயடியாக பஸ்ஸில் போவது வசதியாயிருந்தது. சந்தோஷமாயும். ரயிலிலும் பார்க்க பஸ்ஸை அநுபவிக்க முடிந்தது. ரயில், 'மூ' டையே குழப்பி விடுகிறது. பஸ் அப்படிச் செய்வதில்லை. ரயில், ஊரிலிருந்து விலகி விடுகிறது. பஸ் ஊருக்குள்ளே போகிறது.

ஒரு மாலையில் கொழும்பிற்குப் புறப்பட்டு அடுத்தநாள் விடிய அங்கே போய், அலுவல்களை முடித்துக்கொண்டு அன்றிரவே அங்கிருந்து திரும்பிய போது அது நடந்தது. ஒன்பது மணிக்கு வெள்ளவத்தையிலிருந்து வெளிக்கிட்ட பஸ், ஆறுதலாக, நிதானமாக கோட்டை வரை வரும். நெருக்கடியில்லாத சுத்தமான சூழல் உள்ளே நிலவியிருக்கும். தலையைச் சரித்து சாய்த்து கொள்ள முடிகிற புத்துணர்வு கெடாத வேளை. உற்சாகமாகக் காலிமுகக் கடலையும் உப்புக்காற்றையும் எதிர்கொண்டு தாண்டி வருகிற போதில், தூரத்தூரப் பொட்டுகளாய்த் தெரிகிற கப்பல்களெல்லாம் ஜன்னலால் மறைத்து பிறகு சீற்

றில் தலையைச் சரித்தபடியே அண்ணாந்து நோக்குகிற கண்களுக்கு, அந்தப் பிரமாண்டமான கட்டிடங்கள் தெரிய ஆரம்பித்தன. ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், அவற்றின் மாடிகளில் ஆங்காங்கும் அடுத்தடுத்தும் தெரிகிற வெளிச்சங்கள். கட்டிடம் மங்கிப்போக, வெளிச்சங்கள் மட்டும் கண்ணோடு வந்தன. பஸ்ஸோடு கூட ஓடி வருகிற மாதிரி, தெரு வளைந்து மீண்டும் ஹோட்டல் அருகோடு எதிர்திசையில் போயிற்று. ஒரு வழிப் பாதைகளும் வட்டச் சுற்று வழிகளும்செய்கிறகோலம். மற்றெல்லாம் மறைந்து போய், சற்று உயர, சற்றுத் தொலைவில் கூடவே வந்து கொண்டிருக்கிற அந்த வெளிச்சங்கள் மட்டும் முதன்மை கொண்டு, துண்டு துண்டாய் அருகோடு கூட வானத்தில் மிதக்கிற மாதிரி இருந்தது. வேறொன்றுமில்லாத வெளி உலகு.

ஹோட்டல் பின்னால் நின்றுவிட்ட அந்தக் கணத்திலேயே, அந்த வியப்பும் வந்தது. இது எப்போதோ எங்கேயோ கண்ட மாதிரி.. எப்போதோ எங்கேயோ இதே மாதிரிப் போனது போல!... எப்போ? எங்கே?

ஒரு விமானத்தில் பறந்து கொண்டிருந்த போது, பக்கத்தில் சற்று உயரம் சற்றுத் தூரத்தில் சமாந்தரமாகவே இன்னொரு விமானம் வந்து கொண்டிருந்தது, வழி நெடுக. கனநேரமாக. சாதாரண விமான ஜன்னல்களிலும் பார்க்க அதற்குப் பெரிய ஜன்னல்கள். உள்ளே நடப்பவற்றை வெளியே காட்டக்கூடிய அளவான ஜன்னல்கள். அந்த மற்ற விமானத்தில் இப்படித்தான் உள்ளே பிரகாசமாக விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன! இந்தக் கனவு நினைவில் பிடிபட்டபோது, பஸ் கோட்டை ஸ்ரேஷன் முன்னால் நின்றுவிட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்தது.

முதலில் பிளேன் ஏறிய போது ஒன்பதாம் வகுப்போ, பத்தாம் வகுப்போ. ஒரு வருஷத்து ரயில்வே வாரண்டுகள் எல்லாவற்றையும் பிளேன் ரிக்கற்றுகளாக மாற்றி, ஐயா எல்லோரையும் கொழும்புக்குக் கூட்டிப் போன சித்திரை விடுதலை. பலாலியிலிருந்து இரத்மலானை. பிற்பகல் பயணம். சரியாக ஒரு மணித்தியாலம் பறக்க வேண்டும். எயர்போட் முழுவதும் ஸினியாஸ் பூத்துக் கிடந்தது. நல்ல வெய்யில். விமானம் போட்டுக் கொண்டிருந்த சத்தத்திற்கு ஏறவே பயமாயிருந்தது. பரவாயில்லை, எல்லோரும்தானே. காதில் பஞ்செல்லாம் அடைத்து, விமானம் மேலே எழுந்த போது மடியிலிருந்த இரண்டாவது தங்கை, "அண்ணை, அண்ணை, காதைப் பொத்து......... காதைப் பொத்து......" என்று கத்தினாள்.

போன களைப்புக் கூடத் தெரியாமல் ஆச்சி வீட்டில் போய் இறங்கிய போதும் வெய்யில் உக்கிரம் குறையாமல் அடித்துக் கொண்டிருந்தது. ஆச்சி வீட்டுக்காரர் அப்போது பம்பலப்பிட்டியில் இருந்தார்கள். இப்போது எல்லாரும் வெளிநாட்டில், இந்தப் பயணம் நினைவில் பதிந்த மாதிரி, திரும்பி வந்த பயணம் நினைவிலேயே இல்லை. ஒரு சொட்டும். ஸினியாஸ், வெய்யில், ஹொஸ்ரஸ் தந்த ஐஸ் கோப்பி, தங்கையின் பயம்—இதுபோல ஒன்று கூட எப்படி மனதில் நில்லாமல் போனது. அந்தத் திரும்பிய பயணத்தை நினைவு படுத்துவதற்கு? கன காலத்துக்குப் பிறகு, ஒரு பத்துப் பதினைந்து வருஷத்திற்குப் பிறகு, அம்மாவைக் கேட்டான். "உனக்கென்ன மறந்தா போச்சு? எயர் போட்டுக்குப் போற வழியிலை தெஹிவளையிலை வாங்கினதுதானே அது?"— ஹோலில் ரீபோவில் நீண்ட காலமாகவே நிறங்குன்றா

மலிருக்கிற பிளாஸ்ரிக் பூங்கொத்தைக் காட்டினா. அம்மாவுக்கு இதெல்லாம் வலு ஞாபகம்.

அடுத்த நாலு பயணங்களும் தானே வேலையில் சேர்ந்த பிறகு. சொந்த வாரண்டிலேயே. கொழும்பு — யாழ்ப்பாணந் தான். வாரண்ட் கூட மிஞ்சியிராது. மாதமொருமுறை ஊருக்கு வந்து போகிறவனுக்கு மூன்று ஸெற் வாரண்டே போதாது. ஆனால், வேலை நிரந்தரமாகியது ஒரு அக்டோபரிலோ, நவம்பரிலோ, அதன் பிறகுதான் அந்த வருஷ வாரண்ட் முழுவதுமே கிடைத்தது. அதை வைத்து என்ன செய்வது? முழுவதையும் மாற்ற முடிந்தது. பிறகு, புரமோஷன் ஒன்று கிடைத்த வேளையிலும் இப்படித்தான்.

சொந்த வாரண்டில் முதல்தரம் வந்தபோது, ஊரில் மைத்துனனின் கல்யாணம் நடந்தது. அந்த வேளைக்கு நடப்பாக வந்து திரும்பக் கூடியதாக எல்லாம் வாய்த்தது. அந்த முறை, நடேஸ்வரன் கூட வந்தான். அவனும் இதே மாதிரித்தான். ஒன்றாக வேலைக்குச் சேர்ந்தவன். வருஷ முடிவோடு வந்த அந்த அன்றைக்கு முக்கால்வாசி இந்த வாரண்ட்காரர்கள்தான். நடேஸ், சரியான முகப்பாத்திக் கட்டை.

''அந்தா பார், மச்சான்...... இந்தக் கிழவனுக்கு பெண்சாதி எவ்வளவு இளமையா இருக்கெண்டு.........'' முன்னாலிருந்தவர்களைக் காட்டி, குரலை இறக்காமலே சொன்னான். அவர்களுக்குத் தமிழ் விளங்காது என்பது வடிவாகத் தெரிந்தது. என்றாலும் அந்தரமாயிருந்தது.

பலாலியிலிறங்கி விமான சேவையின் பஸ்ஸில் யாழ்ப்பாணம் வருவதற்குள்ளாகவே, நடேஸ்வரன் அவர்களுடன் பழக்கம் பிடித்துக் கொண்டான். அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக செயற்பட அவன் ஒப்புக்கொண்டு விட்ட மாதிரி இருந்தது. பட்டணத்திலிறங்கி, வீட்டுக்குப் போகிற பஸ்ஸைத் தேடியபோது, நடேஸ் மறித்தான். ''வா ரீ குடிச்சிட்டுப் போகலாம் ''

காலையில் சாப்பிட்டுவிட்டுத்தான் புறப்பட்டது. வழியில் சிற்றுண்டி. பதினொன்றுகூட ஆகவில்லை. அதற்குள் என்ன ரீ? வேண்டாமென்றாலும் விடுவதாயில்லை, நடேஸ். எவ்வளவு குறைந்த நேரத்தில் வீட்டுக்குப் போய் விடலாமென்று பார்த்துவிட வேண்டுமென்பதை அவன் குழப்பினான். கொழும்பிலிருந்து இங்கு வர ஒரு மணித்தியாலம். ஆனால், இங்கே இறங்கி வீட்டுக்குப் போக இரண்டு மணித்தியாலமா? வேறு வழியில்லை, ரீ குடிக்கப் போய்த்தான் ஆக வேண்டியிருந்தது. நடேஸ் தனியாக வரவில்லை. வழிகாட்டப்பட வேண்டியவர்களையும் கூட்டி வந்தான். அவனோடு வெளிக்கிட்டாலே இப்படித்தான், எப்போதும்.

'ஃபமிலி ரூ' மில் போய் இருந்து நாலுபேருக்கும் வடை ஓடர் கொடுத்தான் நடேஸ். ''யாழ்ப்பாணத்து வடையை ரேஸ்ற்' பண்ணிப் பாருங்கோ......'' என்று அவர்களுக்கு அறிமுகம் வேறு. அந்த ஆள், சுகாதாரத் திணைக்களத்தில் வேலை செய்வதாகச் சொன்னார். கொழும்புதான் சொந்த ஊர். ஒவ்வொரு வருட முடிவோடும் ஒவ்வொரு ஊர் போய் வருவார். இந்த முறையாழ்ப்பாணம். நாளை திரும்புகிறார்கள். இன்றைக்கு 'றெஸ்ட் ஹவு'சில் தங்கிவிட்டு.

இளை எறிய அந்தப் பெண்ணை அழைத்துப் போனான் நடேஸ். கனநேரமாயிற்று. யாழ்ப்பாணத்து சாப்பாட்டுக்கடைகளின் உட்புற அமைப்புகளை விளக்கினானோ, ஒரு

வேளை? தங்கள் கந்தோரில் வேலை செய்கிற—விரைவில் ஓய்வுபெறப் போகிற—தங்களால் 'டபாரே' என்று அழைக்கப்படுகிற — டபாரேயை நினைவு படுத்துகிற அந்த மனிதரிடம் பேசிக் கொண்டிருக்கலாம் போலிருந்தது.

வெளியே வந்து அவர்களிடமும் பிறகு நடேசிடம் தனியாகவும் விடைபெற்ற போது, நடேஸ் சொன்னான். ''மச்சான் அது அந்தாளின்ர மனுசியில்லை!......'' எக்கேடாவது கெட்டுப்போ என்று சொல்லிவிட்டுக் கழன்று கொண்டாயிற்று, அன்றைக்கு. பிறகு, கொழும்பு திரும்பியதன் பின் – தேவதாவோ, ஏதோ என்கிற—அந்த நேர்சிடமிருந்து நடேசிற்கு நெடுக ஃபோன் கோல்கள் வந்தபடி இருந்தன.

திரும்பிப்போனபோது நல்ல காலம், நடேஸ் கூட வரவில்லை. கொழும்பு–யாழ்ப்பாணம் பிளேன்களெல்லாம் நினைவு தெரிந்த நாட்களிலிருந்து ஒரே நேர சூசிப் படிதான் பறந்திருக்க வேண்டும் என்று படுகிறது. ஆகச் சின்ன வயதில் - ஐந்தாம் வகுப்பு வரை - ஊர்ப்பள்ளிக் கூடத்தில் படித்த காலங்களில், 'எட்டுமணிப் பிளேன் போட்டுதா?' என்று ஒவ்வொரு நாளும் பார்த்துப் பார்த்துக் காதைத் தீட்டிக் கொண்டு பள்ளிக்கு ஓடியது நல்ல நினைவு.

திரும்பிய அன்றைக்கு மத்தியானம் சாப்பாடெல்லாம் முடித்துக்கொண்டு, இரவுக்கென்று அம்மா கட்டித் தந்த இடியப்பப் பாசலுடன் ஆறுதலாகப் பலாலிக்குப் போக முடிந்தது, அப்போதெல்லாம் என்ன, கார்க்காசு ஐம்பது ரூபா கூட வராது. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை தினசரியின் வாரமலரில் நெல்லை பேரனின் சிறுகதையொன்று அன்றைக்கு வெளியாகியிருந்தது. பேரன், எவ்வளவு நல்ல நண்பன் குழந்தை மாதிரி! ஆனால், அவனுக்கு நேர்ந்த முடிவு? கடவுளே... ஸ்ரீலங்கா ராணுவம், குடிமனைகள் மீது கண்மூடித்தனமாக நடத்திய ஷெல் தாக்குதலொன்றில், ஒரு நள்ளிரவு, தூக்கத்திலிருந்த பேரனும் பெண்சாதி பிள்ளைகளும் ஒன்றாக அப்படியே. பேரன் கூட, குவைத்தில் வேலை பார்த்து விட்டு வந்த பிறகு, 'விமானங்கள் மீண்டும் வரும்' என்ற நல்ல தொடர் குறுநாவலை எழுதினான்.

பேரன், கல்யாணத்திற்கும் வந்திருந்தான். தன் கையால் எழுதி, கண்ணாடி போட்டுச் சட்டமிட்ட பெரிய வாழ்த்துப்பா ஒன்றைப் பாடிப் பரிசளித்தான். கல்யாணம் முடிந்த கொஞ்ச நாளில் தான் புரமோஷன் கிடைத்தது. இரட்டை வாரண்ட் ஆயிற்று. இருவருமாகவே கொழும்பிலிருந்து வந்து போனார்கள். அதுகூட ஒரு நல் வாய்ப்புத்தான்—கல்யாணமான புதிதில் மனைவியை அழைத்துக் கொண்டு இப்படிப் போய் வர முடிந்தது.

அந்தமுறை திரும்பிய போது, நேரே இரத்மலானைக்குப் போகாமல், பிளேன் மட்டக்களப்பிலும் இறங்கி ஏறியது. இதனால் கூடுதலாக ஒரு இறக்கமும் ஏற்றமும். விமானப்பயணத்தில் கூடுதல் 'த்றில்'லைத் தருகிற விஷயங்களே தன்னைப் பொறுத்தளவில் இந்த இறக்கமும் ஏற்றமுந்தான்.

பலாலிக்கு ஒவ்வொரு முறை போனபோதும் ஒரு ஏக்கமிருந்தது. என்ன செய்யலாம். அங்கிருந்து நேரே திருச்சிக்குப் போய்வர ஒரு தரமும் வாய்க்கவில்லை. பலாலியை நினைத்தவுடன் நினைவுக்கு வருகிறதே. திருச்சிதான். அக்கா–பெரியய்யாவின் மகள்–இந்தியாவில் படித்த காலங்களில் பலாலி – திருச்சி விமானக்

# வெளிச்சம்

கட்டணமே ஐம்பது ரூபா சொச்சந்தான் என்றால் எப்படியிருக்கிறது! ஆனால் அது நாற்பது வருஷங்களுக்கு முந்தி.

☐ ☐

என் இடப்பக்க ஆசனத்தில் ஒரு சின்ன சஸ்பென்ஸ் இருந்தது. ஒரு சிறிய பிரயாணப்பை மட்டுமே. அது யார்? எந்தத் தேசம்? எப்படியிருப்பார், பத்து மணி நேரத்திற்கான என் சகபாடி?

நல்ல நிலவெறிக்கும் ஓரிரவின் விமானப் பயணம் பற்றிய சில எதிர்பார்ப்புக்கள் எனக்கிருந்தன.

'ஏரோஃப்புளொத்' பிரதி திங்களிலும் வியாழனிலும் கொழும்பிலிருந்து புறப்படுகிறது. என் பயணம் தோதாக ஒரு வியாழனில் வந்தது—புதன் பௌர்ணமி. புறப்படும் நேரம் மாலை ஐந்தரை. நேரங்களையும் வேகங்களையும் கணக்குப் போட்டுப் பார்த்தால், பயணம் நெடுக நிலவும் கூட வருமென்றே பட்டது. இது கூடிய பட்சம் தெற்கு-வடக்கான பயணம். வலப்புற இருக்கையொன்றில் ஜன்னலுக்கருகே இடம் கிடைத்தால் நன்றாயிருக்கும்.

ஆனால், இடப்புறத்தில் வலது பக்க ஸீற் தான் எனக்குக் கிடைத்தது. மாஸ்கோ போய்ச் சேரு மட்டும் என்ன செய்யப் போகிறேன் என்ற பிரமிப்பு. நிலவு வரட்டும், பார்த்துக் கொள்ளலாம். வலப்புற வரிசையில் ஜன்னலடி ஸீற்றைப் பார்த்தேன். வெறுமையாக இருந்தது.

அப்படியே மற்ற வரிசைகளைக் கண்ணோட்டம் விட்டபோது திருப்தியாக இருந்தது. ஆனால், கூடவே ஒரு மன நோவும். அரைக்கரைவாசி தமிழ் இளைஞர்கள். கூடியபட்சம் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறவர்கள். தம் வாழ்வின் வசந்தங்களைத் தேடி ஐரோப்பிய நாடுகளுக்குப் போகிறவர்கள். அவர்களிற் சிலருடன் விமான நிலையத்திலேயே பேச முடிந்திருந்தது. ஆனாலும், வடிவாகப் புரியவில்லை. ஏன் போகிறார்கள்? போகாமலேயே நின்றிருக்க முடியாதா? இங்கு நின்றே எம் மீட்சிக்கு வழிகேட முடியாதா? எல்லோரும் நின்று தான் என்ன செய்வது? போவதால் கூட சில வேலைகளைச் செய்ய முடியுமென்று படுகிறது. சில வேளை, அதற்குத்தான் போகிறார்களோ? எல்லோரும் என்றில்லாவிட்டாலும் சில பேராவது? ஆனால் ஒன்று எல்லோரிலும் இந்தப் போன வருஷத்து இனக்கலவரம் அழிக்க முடியாத தழும்பு ஏற்படுத்தியிருப்பது புரிகிறது. இலங்கையில் இனக்கலவரம் வருவது வழமையாகிவிட்ட ஒன்றுதான். என்றாலும் இந்த எண்பத்து மூன்று வித்தியாசமானது. இதன் விளைவுகளும் வித்தியாசமாகத் தானிருக்கப்போகின்றன......

சின்ன நீள்வட்ட ஜன்னலுக்கு வெளியே தூரத்தில் தென்னை வரிசைகள்......

பக்கத்து இடத்திற்கு யாரோ வந்தது மாதிரி இருந்தது. விலகினேன். அறுபது வயதாவது இருக்கும். வெள்ளைக்காரர். வழுக்கைத் தலையும் கண்ணாடியும். மொத்தமாயிருந்தார். என்னைப் பார்த்து தலையசைத்துவிட்டு உட்கார்ந்தார்.

தலைக்கு மேலேயிருந்த சின்ன ஒலிக் கருவி கரகரத்தது. கப்டனும் அவர் சகாக்களும் எங்களை வரவேற்றார்கள். இன்ன உயரத்தில் பறக்கப் போகிறோம். இத்தனை பாகை வெப்பநிலை .....

இயந்திரம் சுருதி மாறியது. மெல்ல அசைந்து, முன்னே போய், திரும்பி, ஓடி, விரைந்து, அந்த 'இல் - 62' மேலே எம்பியது. தென்னந்தோப்பு

# வெளிச்சம்

களும் கட்டிடமுங் கீழே போயின. வெய்யில் ஒவ்வொருக்கால் முகத்திற் பட்டது. கடல் – மஞ்சள் வெய்யிலில் மின்னுகிற நீலக்கடல் இலங்கையின் கரைகள் ... டக்கென்று மேக மண்டலம் கீழே போனது.

உள்ளே, இருந்தாற் போலக் குளிராயிருந்தது. பிறகு சரியாயிற்று. யாரோ போட்டிருந்த ரம்மியமான 'கொலோன்' கள் இதமாய்க் காற்றில் பரவின............ ''மாஸ்கோவுக்கா போகிறீர்கள்?''

பக்கத்திலிருந்த கிழவர் வினவினார். உப்பிய கன்னங்களுந் தலையும் ஹிட்ச் கொக்கை நினைவுபடுத்தின.

''ஆம் .....''

அவர் — பெயர் உடனேயே மறந்து விட்டது- பரீஸில் வசிப்பவர். தச்சு வேலை செய்கிறார். மகன் என்ஜினியர். இலங்கைக்கு சுற்றுலா வந்தார். ஒரு மாத மட்டில் நின்றிருக்கிறார். பல இடங்களும் பார்த்தார். சோக்கான இடம். அருமையான மனுசர்கள்.

''யாழ்ப்பாணம் போனீர்களா?''

தெரியாது. போகவில்லை. நான் அந்த ஊர் என்று சொன்னேன்.

வெய்யில் சுவறிய மேகங்கள்தாம் கீழே அடர்ந்து கிடந்தன. ''இந்தியாவுக்கு மேலே போய்க் கொண்டிருக்கிறோம்......''... என்றார், கிழவர்.

ஏழுமணி இந்த உயரத்திற்கும் இந்தத்திசைக்கும் — நேர வேறுபாட்டோடு ... இன்னமும் வெய்யில் சாத்தியமென்றே பட்டது. நிலவைக் காண முடியாதோ என்றிருந்தது ...

உணவு வந்தது. சாப்பிட்டு முடித்த பின்னும் தட்டில் பாதிக்கு மேல் மீதியிருந்தது. அசைவம் என்று தெரிந்தவற்றை யெல்லாம் ஒதுக்கி வைத்ததில் வந்த விளைவு.

''போகிற இடத்தில் கஷ்டப் படப் போகிறீர்கள் .....'' என்று பிரெஞ்சுக் கிழவர் சிரித்தார்.

சாப்பிட்டபின் மெல்லிய தூக்கம் வந்தது. வழியில் அபுதாபி வந்தது. நிலவு மட்டும் வரவில்லை.

ஆனால் அந்த நிலவைப் பிறகு பார்த்த போது ஏழு வாரங்கள் கழிந்திருந்தன. அது பிறையாக இருந்தது. திரும்பி வரும் போது, ஷெர்மெத்தியேவோ விமான நிலையத்திற்கு வந்துகொண்டிருந்த வேளையில், லெனின் குன்றுகளைத் தாண்டி, ரக்ஸி விரைந்து கொண்டிருந்தது. நீண்ட சாலையின் இருமருங்கும் நெடிதுயர்ந்த மர வரிசைகளும் அவற்றுக்கு மேலே இன்னும் இருள் நெருங்காத வானும் தெரிந்தன. அப்போது பத்துமணி. என்றாலும் அது வெண்ணிரவுகளின் காலம். நடுவானுக்குச் சற்றுக் கீழே நிலா நின்றது.

விமானத்தில் ஏறிய போது விடிந்திருந்தது. நாலுமணி. மேலெழுந்ததும், அடிவானத்தில் செவ்வுருண்டையான சூரியன். இன்னும் கொஞ்சம் போனால், வெள்ளியாய்க் கீழே மின்னுகிற யூரல் மலைத் தொடர்.

இந்த விமானத்திலும் நிறைய இலங்கை இளைஞர்கள் வந்தார்கள். ஆனால், இவர்கள் அங்கு புலமைப் பரிசில் பெற்று, பல்வேறு பல்கலைக்கழகங்களில் படிக்கிற – விடுமுறைக்கு வீடு செல்கிற — தென்னிலங்கை மாணவர்கள். இருபத்தைந்து முப்பது பேராவது இருக்கும். போனபோது கூட வந்த தமிழிளைஞர்கள் எல்லோரும் எங்கெங்கோ போய்ச் சேர்ந்திருப்பார்கள். அல்லது போக இன்னும் முயற்சித்துக் கொண்டிருப்பார்கள். எங்கு முடியும் அந்தப் பயணங்கள்? ஏனிந்தப்

# வெளச்சம்

பாடு? நினைக்க நினைக்க அந்தரமாயிருந்தது.

போதாக் குறைக்கு, ஹேமந்த சொன்ன விஷயம்! மாஸ்கோவிலிருந்து போய் கொழும்பில் இறங்குகிற தமிழர்களையெல்லாம் கட்டுநாயக விமான நிலையத்தில் வைத்தே கைது செய்கிறார்களாம்! தனக்கு யாரோ கொழும்பிலிருந்து ஃபோன் பண்ணியபோது அதைச் சொன்னதாக ஹேமந்த சொன்னான். முக்கால்வாசி பொய்யாய்த்தானிருக்கும். ஆள் சரியான வகுப்பு வாதி, வயிற்றெரிச்சல்காரன்..... என்றாலும் கவனமாய்த்தானிருக்க வேண்டும். என்ன கவனம்? என்ன இருக்கிறது கவனமாயிருக்க?

'வாறது வரட்டும் பாப்பம் .....'

நாலுமணிக்குக் கொழும்பிற்குப் போய்விடலாமென்று சொன்னார்கள்.

வெளியே வந்தபோது வெய்யில் விளாசிக்கொண்டிருந்தது. அவுக்கென்று வெக்கை கௌவிக்கொண்டது.

ஒன்றும் நடக்கவில்லை, இறங்கிப் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தாயிற்று. அழைத்துப் போகக் காரோடு சரவணன் வந்திருந்தார்.

ஆனால், அடுத்த — முறை-சரியாக நாலு வருஷங்களுக்குப் பிறகு-இதே மாதிரி, இந்தியாவிலிருந்து திரும்பி வந்தபோது, அழைத்துப்போக எவரும் வரவில்லை. நகருக்குப் போய்ச்சேரவும் வழியிருக்கவில்லை. தன்னில்தான் பிழை, எப்போது திரும்புவேனென்று எவருக்குமே அறிவிக்காதது. எப்படி அறிவிப்பது, தனக்கே தெரியாதபோது? மூன்று மாதப் பயிற்சிக்கென்று போய், ஒருமாதத்தோடு அதைவிட்டு, இடைநடுவில் இருந்தாற்போலத் திரும்பி வந்தால் .....?

வந்திறங்கிய அன்று கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் ஊரடங்கு போட்டிருந்தது. ஜே.வி.பி பிரச்னை ஏதோ. அந்தச் சேதிமீனம்பாக்கத்திலேயே தெரிந்திருந்தது என்றாலும் விமானப் பயணிகள் நகருக்குப் போவதற்கு ஏதாவது ஏற்பாடுகள் இருக்குந்தானே என்று வந்தாயிற்று. வந்த பின்தான் தெரிந்தது அப்படி ஒன்றுமே இல்லாதது. அன்றைக்கு எவ்வளவு மினக்கேடு. ஒரு ரக்ஸிகூட இல்லை. மூன்றரை நாலுக்கு வெளியே வந்து ஆறு மட்டும் காத்திருந்தும் ஒன்றுமில்லை. பிறகு, இருட்டிக் கொண்டிருந்த வேளையில் ஒரு வான்வந்தது. தனக்கு பாஸ் இருக்கிறது என்று காட்டினான் ட்றைவர்—பயந்து பயந்துதான் ஏறியதும், மூன்று இடங்களில் மறித்தான்கள். எத்தனை படபடப்பு. மறிக்காமலே சுட்டிருப்பான்களோ? ஜேவிபி பிரச்சினைக்காலங்களில் இந்த மாதிரி செக்கிங்குகளிலிருந்து தப்புவதற்கு தமிழராயிருப்பது எப்போதுமே



வசதியாயிருந்தது. என்றாலும் எத்தனை கேள்விகள், மிரட்டல்கள் ........

"உங்களோட வராம தனிய வந்திருந்தா வலு கஷ்டப்பட்டிருப்பேன், ஸேர்" என்று நூறு முறையாவது சொல்லியிருப்பான், தயா. அவனுடைய சிங்களம், 'பிளேன்ரீ எக்காய், ஃபோரேஸ் எக்காய்...' என்பதோடு சரி.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணை நூலகம்.

# வெளிச்சம்

உண்மையில் தயாவை விட்டுவிட்டு வந்திருக்கவே முடியாதுதான். போகும் போதே அப்படி ஒரு ஒப்பந்தம். உடன்பாடு. பயிற்சிக்காக ஐந்துபேரைத் தேர்ந்தெடுத்து 'ஸ்கொலர்சிப்' பில் அனுப்பியது கல்லூரி. எல்லாம் இலவசமாய்த் தமிழ் நாட்டில்— அதுவும் சென்னையில் — மூன்று மாதம் என்றபோது என்ன மாதிரி இருந்தது! இவர்களை மற்றவர்கள் பொறாமையோடு பார்த்தார்கள்.



ஆனால், ஐந்துபேருமாய் யாழ்ப்பாணத்தில் பஸ் ஏறி, ஒவ்வொரு இடமாய் அமைதிப்படையின் செக்கிங்குக்கென்று இறங்கி. வவுனியாவுக் கிடையில் பத்து இடமாவது இருக்கும். அப்போதுதான் சுள்ளிட்டது. நித்திரையிலிருந்து திடீரென்று விழித்தமாதிரி இருந்தது. என்ன பைத்தியக்கார வேலை! வீட்டில் எல்லோரையும் இந்த 'அமைதி'க் கிடையில் விட்டுவிட்டு தான் மட்டும் மூன்றுமாதம் வெளிநாடு போக எப்படி மனம் வந்தது? வேறு துணையுமில்லை ... ஏதோ கவர்ச்சியில் ஏதோ மயக்கத்தில் இவ்வளவு தூரம் வந்து விட்டு இப்போது விழித்தாயிற்று...... இனி? கொழும்போடு திரும்பி விடலாமா?

கொழும்பில், லொட்ஜ் அறையில் தூக்கம் பிடிக்காமல் உருண்டுகொண்டிருந்த போது, மற்றக் கட்டிலில் கிடந்த தயாகேட்டான்:

''என்னமாஸ்ரர்,பிரச்சனை?...''

சொன்னதும், எழும்பி ஓடி வந்து கட்டிக்கொண்டான்.

''சத்தியமா, எனக்கும் உதுதான் மாஸ்ரர் மண்டையைக் குழப்புது ........ விசர் வேலை பாத்திட்டம்......''

மெல்லக் கேட்டான்:

''திரும்புவமா?...''

மற்றவர்கள் விடுவதாயில்லை. ஆறுதல் சொன்னார்கள். அப்படி பெரிய பிரச்சனை எதுவும் இனி வராது. ''கண்மூடி முழிக்க முந்தி மூண்டுமாதம் போயிடும் ..... வந்திடலாம்'' சம்மதிக்க வேண்டித்தான் இருந்தது.

தயாவைக் கூப்பிட்டுத் தனியே சொன்னான். ''தயா, போவம். அங்கை போய் ஏதும் பிரச்சனை பற்றிக் கேள்விப்பட்டா, அல்லது எங்களுக்கு மனம் அந்தரிச்சா உடனை திரும்புறது!வேறகதையில்லை... சரியா?''

''நீங்க திரும்புவமெண்டா, நான் வாறன். நான் திரும்புவமெண்டா, நீங்க வரவேணும்......''

திருவனந்த புரத்தில், 'கப்டன். ஜெயவர்த்தனா' என்று மார்புப்பட்டி அடையாளங் காட்டியவரின் வாழ்த்துக்கு நன்றி சொல்லி இறங்கி, குடிவரவு சடங்குகளை முடித்து, ஏதோ ஒரு 'நம்பியார்' என்று இன்னொரு மார்புப்பட்டி பெயர் சொன்ன அதிகாரியின் கம்பீரமான அசைவுகளை ரசித்தபடி கஸ்ரம்ஸ் கியூவில் நின்ற போது, தயா காதுக்குள் சொன்னான்:

''நீங்க சொன்ன மாதிரிக் கெதியா செய்ய வேண்டித்தான் வரும் போலிருக்கு, ஸேர்......''

சென்னையில் ஒரு மாதந்தான் நின்றார்கள்.

(தொடரும்)

# வெளிச்சம்



ஞானரதன்

அவனைத் திடீரெனக் கண்ட போது, அவனின் முகம் என் மனதில் நிலைகொள்ளச் சற்று நேரம் பிடித்தது.

நிறம் கறுத்துப்போய், கழுத்துப் புறம் திடீரென நீண்டுவிட்டது போல... அவனின் முகத்தில் எலும்புகள் இலேசாக முகடிட்ட போதிலும், வைராக்கியம் பொதிந்த இரு கண்களும் கறுப்புப் பொட்டுகளாக அப்படியேதான் -

உள்ளத்தின் ஆழம் வரை ஊடுருவும் ஆற்றலுடன் -

எத்தனை வருடங்கள் இருக்கும்?

நான் எப்படி இவனை மறந்து போனேன்?

அவன், அவனது குடும்பத்தவர் எல்லோருமே காலத்தோடு அள்ளிக் கொண்டு போன நினைவுகளாய் இருந்த எனக்கு இப்படியொரு புதுப்பித்தல் நிகழும் என நான் எதிர் பார்க்கவே இல்லை.

தெருவோரத்தில் நின்ற பூவரச மரத்தைப் பற்றியவாறு அவன் யாரோ ஒரு வழிப்போக்கரிடம் விசாரிப்பது யன்னலூடாக நன்றாகத் தெரிகிறது. நிச்சயமாக எனது வீட்டையே விசாரித்துக்கொண்டு இருக்கிறான் என்பதில் சந்தேகமே இல்லை.

பிஞ்சுக்கால்களினால் எனது முது கில் மிதித்தேறி, எனது தோள்க ளைப் பற்றி காதுகளைப் பிடித்துத் திருப்பித் திருப்பி சூரன் தலை ஆட் டிய எனது மகனின் இளமைக் காாலம் நினனவுக்கு வருகிறது.

இப்பொழுது இவன் வந்து நிற்கி றான்.

நான் அவனை இவ்வளவு தூரம் வெளியேநிற்க வைத்திருக்கக் கூடாது. மனத்தின் வேகத்தோடு செயற்பட முடியாது தடுமாறிக் கொள்கிறேன். எனது செயலின் விரைவு போதவில் லை. கதவைத் திறந்துவிடுகிறேன். உணர்வுகள் மோதி சிரிப்பாகின்றன. அவனை உள்ளே வந்து அமருமாறு பணிக்கிறேன்.

அவனும் அவனுடைய நண்ப னும் உள்ளே வந்து பக்குவமாக துப் பாக்கிகளை வைத்தவாறு அமர்கின் றார்கள்.

பின்னர் அவன் சொற்சிக்கனத் தோடு பேசினான்.

அவனின் பேச்சோடு எனது மனம் ஒட்டியும் ஒட்டாமலும் கட்டுப்பா டற்ற வேகத்தோடு ஓடுகிறது. எனது மனதில் எப்பொழுதோ புதையுண்டு போய் -

ஓர் இனிய வாழ்க்கையின் சார மாக அடையாளம் காட்டியவைதான் மேலெழுகின்றன. என்ன விசித்திர மனசு?

● ● ●

மயிலம்பாவெளிக் காணிக்கு நானும் மகனும் புறப்படும் போதெல் லாம் எங்களுடன் வேறொரு சைக் கிளை எடுத்துக்கொண்டு அவனும் வந்துவிடுவான். கல்லடியில் சிவா னந்தா கல்லூரிக்கு முன்பாகவிருக் கும் அரசமர நிழலில் ஓய்வெடுத்துக் கொள்வோம். அந்த அரச மரத்தடிக்கு வரும்போதெல்லாம் விபூதிக்குறியும் வெள்ளைச் சேலையுமாக மரவள்ளிக் கிழங்குப் பொரியல் விற்கும் கிழவி யின் உருவம்தான் நினைவுக்கு வரும். பள்ளிப்படிப்போடு, பெரிய துண்டுக ளாக வெட்டிப் பொரித்த மரவள்ளிக் கிழங்கும், உறைப்புக்காரமும் என்று எனது மகனும், அவனும், அந்த வெண் மணலில் ஓடித்திரிவார்கள். தேடிப் பிடித்து இருவரையும் எனது சைக்கி ளில் ஏற்றிக்கொண்டு வீடு திரும்பும் வரை இப்படித்தான். இருவரும் ஒரே வகுப்பில்தான் படித்தார்கள். நான் மட்டக்களப்புக்கு மாற்றலாகி வந்த போது இப்படியொரு நட்புறவு தொற் றிக்கொள்ளும் என நினைத்திருக்க வில்லை. நொச்சிமுனையில் தான் வாடகைக்கு வீடு எடுக்க முடிந்தது. அயல் வீட்டிலிருந்து இவன்தான் முதன்முதலில் வந்து அறிமுகத்தைத் தொடக்கி வைத்தான். இவன் கடைக் குட்டி. இரண்டு அக்காமார். இரண்டு அண்ணன்மார் என்று அவனின் குடும்பம் பெரிது. படுவான் கரையில் வயல் பூமியொன்று அவனின் தந்தை யின் உழைப்போடும், வாழ்வோடும் ஒன்றிப்போயிருந்தது.

நொச்சிமுனையில்,

ஊர்றோட்டிலிருந்து பார்த்தால் கலைமகள் வீதியின் முடிவில் எங்கள் வீடு. வீதியின் எஞ்சிய பகுதி மட்டக் களப்பு வாவியின் தண்ணீர் மினுங்க லில் போய்முடியும். தூரத்தே தோணி கள் அசையும் - ஆற்றங்கரையில் துடிக்கத் துடிக்க பரட்டை ஒட்டி மீன் விலைப்படும் காலங்களில் மக் கள் ஆரவாரம் அதிகரிக்கும்.

# வெளச்சம்

எனது மகனும், அவனும் வீட்டு நாயைக் கட்டியிழுத்து வாவிக்குக் கொண்டு போய் குளிக்க வார்த்து விட்ட பின் நாய் வீட்டைச் சுற்றியோடி, மணலில் புரண்டு உதறித் திரியும் வரை சிரிப்போடு அவனும் எனது மகனும் பின்தொடர்வார்கள்.

• • •

அந்த நிலம் மணற்பாங்கானது. கடற்கரை அரைமைல் தொலைவில் இருந்தாலும் அந்த நிலத்தில் காட்டு மரங்களல்ல, எந்த மரமுமே மூச்சோடு வளரக்கூடியது என நாங்கள் குறுகியகாலத்திலேயே அறிந்துகொண்டோம். ஆறுமுகத்தான் குடியிருப்புக்கும், மயிலம்பாவெளிக்குமிடையில் கடலோசை கேட்காத தூரத்தில்தான் எங்களது காணித்துண்டுகள். அவனின் தந்தையும் நானும் ஏதோ ஒரு நம்பிக்கையில் இந்தக் காடுவளர்ப்புத் திட்டத்தில் இறங்கி நான்கு வருடங்கள் முடிகின்றன. அப்பொழுது நாம் சரியாகக் களைத்துப்போயிருந்தோம். காட்டுவெளியும், அனற்காற்றும், தாகமும் எம்மைப் பின்னியிருந்தன. அவனும், எனது மகனும் காணிகளுக்குக் காவல் புரிகின்ற அப்புவின் கொட்டிலை நோக்கி தண்ணீர் எடுப்பதற்காக சென்றுகொண்டிருந்தார்கள். கால்கள் சுடுமணலில் சறுக்கிப் புதைய அவர்களின் நடையில் ஏற்பட்ட மாற்றம் எனக்கு இரக்கத்தை ஏற்படுத்தியது. நான் நடந்துகொண்டிருந்தேன். வேப்ப மரமொன்று சடைத்து வளர்ந்திருந்தது. அதன் நிழலில்தான் நானும் அவனின் தந்தையும் ஆறுதலாக அமர்ந்து பேசிக் கொள்வோம். இன்னும் ஒரு வருடத்திற்கு பல்லைக் கடித்துக்கொண்டு இருந்துவிட்டால் எங்கள் துன்பங்கள் நீங்கிவிடும். தடைப்பட்டுப் போயிருக்கும் மகளின் திருமணம் முடிந்துவிடும் – அவனின் தந்தையின் கதைகளையெல்லாம் கேட்பேன். அம்மர நிழலில்போய் அமரலாம் எனக் கால்களை உயர்த்தியபோது, பட்டுப்போய் மணலில் உக்கிக் கொண்டிருக்கும் காரைமுட்கள் கால்களைக் கூச வைக்கின்றன. இன்னொரு புறத்தில் காற்றோடு அள்ளிச் செல்லப்பட்டுப் புதையுண்டுபோன குன்றிமணிகள் மீண்டும் மிதந்து அழகு காட்டின.



தொட்டாற் சுருங்கிகள் சிலிர்த்துப் பூத்திருந்தன. நாரைகள் பறந்து வந்து மலைவேம்பு உச்சியில் நோகாமல் உட்காரும் லாவகம் களைப்பினிடையே மனிதனை உற்சாகமூட்டியது. நான் வேப்பமர நிழலில் கால்களை நீட்டி, அமர்ந்து சேட்டைக் கழற்றி மரக்கொப்பில் வீசினேன். உடனேயே கடற்கரைத் திசையிலிருந்து ஊதற்காற்று வீசுவது தெரிகிறது. கிழக்கே கருமுகிற்கூட்டம் வெள்ளி விளிம்புகள் கட்டி மூட்டம் கொண்டிருந்தது. வியர்வை காய்ந்து உடல் சில்லிட்டது. அவனும் எனது மகனும் பாத்திரமொன்றில் தண்ணீருடன் வந்து சேர்கின்றார்கள். தண்

# வெளிச்சம்

ணீரை வாய்க்குள் ஊற்றிய போது முகத்தையும் நெஞ்சையும் நனைத்தது. எனதுள்ளமே நீரில் சங்கமமாகி விட்ட சுகம் போல – நான் சாய்ந்து மணலில் சரிகிறேன். எவ்வளவு நேரம் அப்படி வானுயர வளர்ந்திருந்த காட்டுமரங்களைப் பார்த்தவாறு சரிந்திருந்தேனோ தெரியவில்லை. அவனின் தந்தை கூறியதுபோல இன்னும் கொஞ்சக் காலத்தில் ஆகக் குறைந்தது ஆளுக்கு அறுபதினாயிரம் ரூபாவென்றாலும் தேறும். ஐந்து வருட உழைப்பு. அவனும் எனது மகனும் தன்னிச்சையாக வளர்ந்திருந்த பேய்க் கொம்மட்டிக் காய்களை எறிந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவனின் தந்தை வந்திருந்தால் வேலை உசாராகப் போய்க்கொண்டிருக்கும். வந்தவுடனேயே வேலை தொடங்கிவிடும். சற்று நேரத்தில் புளிச்சாதமும் ஏறாவூர் தயிருமாக மணலில் வைத்துச் சாப்பிடுவோம். மீண்டும் கத்தி, கோடரி, மண்வெட்டி யென்று வியர்வை பிழிந்தெடுத்த நாட்கள் எத்தனை?

பதிமருந்து, இப்பில் இப்பில், சவுக்கு, பலாவென்று ஒழுங்குக் கிரமத்தோடு எங்களின் உழைப்பின் சாட்சியாக அம்மரங்கள் அந்தக் கன்னி நிலத்தில் தழைத்தோங்கியிருந்தன. சறுக்கல் நடையோடு அலுமினியக் குடத்தில் அவன் துரவிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து எனது மகனிடம் கொடுத்துவிட்டு எனது மகன் நீட்டிக்கொண்டிருக்கும் வெற்றுக்குடத்தை வாங்கிக்கொண்டு துரவு நோக்கிப் போவான். முதுகில் வெயில் சூடேறும்வரை தண்ணீர் ஊற்றுவோம். ஆவணி, புரட்டாதி கழிந்து போனால் வானம் கறுக்கும், காற்று மாறும், மழைபெய்யும். ஒவ்வொரு சனியும் ஞாயிறும் காலை ஐந்தரை மணிக்கு நொச்சிமுனையிலிருந்து புறப்படுவோம். சைக்கிலோட்டம் எட்டுமைல். மணற்பூமியானதால் நடையாக ஒரு மைல். இப்படித்தான் ஐந்து வருடங்கள் கழிந்தன.

அதன்பிறகு எனக்கு இடமாற்றம் கிடைத்தது. யாழ்ப்பாணம் குடும்பத்தோடு வந்து சேர்ந்தேன். அப்பொழுது இந்திய இராணுவம் எங்கும் நிலைகொண்டிருந்தது. அவனின் தந்தையிடமிருந்து ஒரு கடிதம் எனக்கு வந்தது. அதில் மயிலம்பாவெளிக்குப் போக முடியாதென்றும், இரவு பகலாக லொறிகளில் எங்களது காணிகளில் இருந்த மரங்கள் எல்லாம் காவலரண்கள் அமைப்பதற்காக இந்திய இராணுவத்தாலும் மற்றும் அவர்களின் கையாட்களாலும் வெட்டி ஏற்றிச்செல்லப்பட்டுவிட்டன எனவும் அவனின் தந்தை எழுதியிருந்தார். அதன் பின்பு அவனின் தந்தை எழுதவே இல்லை. அவரை விசாரணைக்காக இந்திய இராணுவம் ஒருநாள் அழைத்துச் சென்றபோது ஊரவர்கள் சிலர் கண்டார்களாம். அதன் பின்பு எங்களின் நட்புறவு இருளில் மூழ்கியது. நட்புறவு மட்டுமா?

• • •

இந்திய சிறிலங்கா இராணுவங்களின் அட்டூழியங்களிலிருந்து இவனது குடும்பத்தவர்கள் மீண்டிருப்பார்களா? அல்லது அவர்களின் கதை சோகமான பக்கங்களாகப் புரண்டு போயிருக்குமா? அப்படியிருக்குமாயின் அவற்றை மீளவும் நினைவுக்குக் கொண்டு வந்து அவனைத் துன்புறுத்த விரும்பாமல் நான் மௌனமா

கவே அமர்ந்திருக்கிறேன். அவனின் மனதில் புயலொன்று அடங்கிப் போயிருக்குமாயின் மீண்டும் அதைக் கிளறி விடுவதில் என்ன பயன் இருக்கப்போகிறது? என்னைப் போலவே அவனும் என்மகன், என்மனைவி என்ன ஆனார்கள் என்று கேட்காமல் இருப்பதுபோல்...

என் மன-இருக்கையிலிருந்து அறிவு, அனுபவம், எனது அடையாளம் எல்லாமே விலகிச் சென்று விடுகின்றன. அவன் வீட்டுக்குள் நுழைந்தவுடனேயே கடதாசி மாலைகள் சூட்டப்பட்டிருக்கும் எனது மகனின், எனது மனைவியின் படங்களைப் பார்த்திருக்கக்கூடும்.

''என்ன மாமா பேசாமல் இருக்கிறீங்க நீங்க தனியவா இருக்கிறீங்க. எனக்கு நேரமாகுது. நான் போயிற்று வாறன் மாமா'' என விடை பெறுகிறான்.

நான் இழந்து போன அத்தனையும் வந்து செறிந்துவிட்டது போன்ற உணர்வில் அவன் புதிதாய் தோற்றம் பெறுகிறான். நான் வழியனுப்பி விடுகிறேன். □□


- பொடி வேலைகள்
- வெல்டிங் வேலைகள்
- பெற்ரோல். டீசல் என்ஜின் திருத்த வேலைகள்
- ரிங்கர் வேலைகள்

**அனைத்தும் ஒரே இடத்தில்**

ட்றான்ஸ் போட்ஸ் சேவைகள்

# குட்டி கராச்

இல - 08 சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## வெளிச்சம்

# அபத்தமும் அர்த்தமும்

## 6

பிரம்மஞானி

மனித இருப்பு நிலையின் தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தமாக, தேவைகள் மனிதர்களை ஆட்கொண்டு நிற்கின்றன. சீவியத்திற்கு ஆதாரமான தேவைகளை நிறைவுசெய்யும் எத்தனிப்பாகவே மனிதர்கள் செயற்படுகிறார்கள். உழைக்கிறார்கள். உழைப்பால் மனித குலம் வளர்ச்சி பெற்று முன்னேற, தேவைகளின் நிரப்பந்தமும் விரிவுபெற்று வளர்கிறது. என்றுமே நிறைவுகாண முடியாத ஒன்றாக, தணிக்கத் தணிக்க பற்றி எரியும் தீயாக. தேவைகளின் பரிமாணம் விரிந்து செல்கிறது. தேவைகள் பெருகி, நிறைவு பெறாத நிலையில் பற்றாமை (SCARCITY) பூதாகரப் பிரச்னையாக உருப்பெறுகிறது. பற்றாமை என்ற வாழ்நிலை உண்மையை அடிப்படையாகக் கொண்டு சமூக உலகத்து முரண்பாடுகளை விளக்க முனைகிறார் சாத்தர்.

இந்தப் பூமியால் சுமக்கமுடியாத அளவிற்கு மானிடத்தின் தேவைப் பளு பல்கிப் பெருகி வருகிறது. வாழ்வோர் தொகை பெருகிவர, வாழும் வசதிகள் அருகிப் போகிறது. எல்லோருக்கும் எல்லாம் போதுமானதாகக் கிடைப்பதில்லை. இருப்பதையெல்லாம் ஒரு சிலர் பிடுங்கிக்கொள்ள இல்லாமை மற்றவர்களைத் தீண்டுகிறது. பற்றாமையின் அழுத்தத்தால் மனித உலகத்தில் அநீதியும் அராஜகமும் புகுந்து கொள்கிறது. மனித உறவுகளில் முரண்பாடும் மோதலும் தோன்றுகிறது. போதாமையின் கோரப் பிடிக்குள் சிக்குண்டுகிடக்கும் இந்த உலகத்தில் மனிதனே மனிதனுக்கு விரோதியாக மாறிவிடுகிறான். என்கிறார் சாத்தர்.

எல்லோரும் வாழவேண்டும். எப்படியோ வாழவேண்டும். மாளாது வாழவேண்டும். ஆனால் எல்லோரும் நிறைவோடு, நிம்மதியாக வாழ்வதற்கு இடையூறாக பற்றாக்குறை நிலவுகிறது. போதாமை என்ற கொடுமை மனித வாழ்வை ஒரு போராட்ட களமாக மாற்றிவிடுகிறது. நாளாந்த சீவியத்திற்காக மனிதர்களிடையே கடும் போட்டி எழுகிறது. பிணக்குகள் தோன்றுகின்றன. வன்முறை வெடிக்கிறது. மனிதனின் பிரதான எதிரியாக மனிதன் மாறுகிறான். தான் வாழ்ந்தால் போதும் என்ற சுயநலத்துடன் மனிதன் மனிதனுக்கு எதிராகப் போர் தொடுக்கிறான். போதாமை, மனிதாபிமானத்திற்கும் மனுநீதிக்கும் சமாதிகட்டிவிடுகிறது.

# வெளிச்சம்

உலகில் அதர்மம் தலைதூக்குகிறது. ஒடுக்குமுறையும், சுரண்டல் முறையும் தாண்டவமாடுகிறது. பசி, பட்டினி, பஞ்சம், போர், புரட்சி, இனக்கொலை என்ற கொடுமைகள் தலைவிரித்தாடும் நரக உலகமாக மனித உலகம் மாறிவிடுகிறது. இவ்விதம், போதாமை என்ற பிரச்னையை முதன்மைப்படுத்தி, மனித வாழ்வை அவலங்கள் நிறைந்த துன்பியல் வரலாறாக சித்தரிக்க முனைகிறார் சாத்தர்.

சாத்தரின் ஆய்வில் பற்றாமை என்ற மனித இருப்புநிலை இயங்கியல் இயக்கத்திற்கும் களம் அமைத்துக் கொடுக்கிறது. பற்றாக்குறையை நிவர்த்திசெய்யவே மனிதர்கள் உழைக்கிறார்கள்; செயற்படுகிறார்கள். எனவே, மனித செயற்பாட்டு சக்தியாக சாத்தர் கற்பிக்கும் இயங்கியல் இயக்கத்திற்கு போதாமை அடித்தளமாக இருக்கிறது. இந்த வகையில் மனித வரலாற்று இயக்கத்தின் எதிர்மறை விதியாக (*Principle of negativity*) போதாமை அமையப் பெறுகிறது என்பது சாத்தரின் வாதம்.

பற்றாமை என்ற வாழ்நிலைப் பிரச்னையை மையமாகக்கொண்டு மனித உலகத்தின் சகல முரண்பாடுகளையும் விளக்க முனைகிறார் சாத்தர். இன்றைய உலகத்தின் அநீதிகளுக்கு எல்லாம் பற்றாமையே மூலக் காரணி என்ற ரீதியில் அவரது விளக்கம் அமைகிறது. இந்தப் பார்வை எந்தளவிற்குச் சரியானது? இது மார்க்சிய வரலாற்று பொருளிய நோக்கிற்கு ஒத்திசைவாக அமைகிறதா? என்பது பற்றி பார்ப்போம்.

பற்றாமை என்பது மனிதர்கள் எதிர்கொள்ளும் ஒரு ஜீவாதாரப் பிரச்னை என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்தப் பிரச்னை பூவுலகின் புறநிலைகளால் பிறக்கவில்லை. இயற்கையின் வளங்கள் வரண்டுபோனதால் தோன்றவில்லை. இது மனிதர்களால் உருவாக்கப்படும் பிரச்னை. மனிதர்கள் படைத்த பொருளுலகில், மனிதர்கள் வகுத்துக்கொண்ட பொருளுற்பத்தி உறவுகளிலிருந்து எழுந்த பிரச்னை. வாழ்நிலைத் தேவைகளை நிவர்த்திசெய்ய மனிதர்கள் அமைத்துக்கொள்ளும் அநீதியான உற்பத்தி உறவுகளிலிருந்தே பற்றாமை தோன்றுகிறது. எனவே, பற்றாமையிலிருந்து சமூக அநீதிகள் தோன்றுவதாக வாதிப்பது தவறு. மாறாக, சமூக அநீதிகளிலிருந்தும் சமத்துவமற்ற மனித உறவுகளிலிருந்தும், பற்றாமை தோன்றுகிறது எனக் கொள்வதே சரியானதாகும்.

அநீதியான, சமத்துவமற்ற சமூக உறவுகளுக்கு தனியார் சொத்துடமையே காரணம் என்புதை மார்க்சிய வரலாற்றுப் பொருளியம் விளக்குகிறது. சாத்தருக்கு இது தெரியாததல்ல. உற்பத்தி சாதனங்களுக்கு உரிமையாளர், உரிமையற்றோர் என்ற ரீதியில், அதாவது பொருளுடையார், பொருளற்றார் என்ற அடிப்படையில் அமையப்பெறும் உற்பத்தி உறவுகள் மனிதர்களை முரண்பட்ட வர்க்கங்களாகப் பிளவுபடுத்திவிடுகிறது. சொத்துடமையின் அடிப்படையில் எழும் அநீதியான பொருளுற்பத்தி உலகில், உழைப்பவனுக்கு உழைப்பின் பயன் கிட்டுவதில்லை. அவனது உழைப்புச் சக்தியானது பொருள்களில் பொதிந்து, பொருள்மயமாகி, பண்டமாகி, பணமாகி, இலாபமாகி, உழைக்காத வேறொருவனுக்கு, அதாவது சொத்துடமையாளனுக்குச் சென்றடைகிறது. இதனால், தான் படைத்த பொருளுலகிலிருந்து உழைக்கும் மனிதன் அந்நியமாகி நிற்கிறான். தனியார் சொத்துடமை நிலவும் வர்க்க முரண்பாட்டு உலகில் பொருளுடையவனைப் போதாமை தீண்டுவதில்லை. தேவைக்கு மிஞ்சிய செல்வமும் பொருளும் சொத்துடமை வர்க்கத்திடம் குவிகிறது. இதனால், சொத்துடமையற்ற உழைக்கும் வர்க்கம் வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய முடியாது இன்னல்

படுகிறது. எனவே, பற்றாமை என்பது பாட்டாளிவர்க்கத்தை மட்டுமே பீடிக்கும் பிணி. மார்க்சிய வரலாற்றுப் பொருளியம் இந்த உண்மையை புலப்படுத்திக் காட்டு கிறது. சாத்தரின் ஆய்வு பற்றாமை என்ற பிரச்னையை பொருளுற்பத்தி உலகிற்கு எடுத்துச் செல்லவில்லை. வர்க்க முரண் பாட்டுக் களத்திலும் நிறுத்திப் பார்க்க வில்லை. மாறாக, பற்றாமையை வர்க்க வேறுபாட்டிற்கு அப்பாலான மானிடத் தின் பொதுப் பிரச்னையாக சாத்தர் பார்க்கிறார். மனித வாழ்வின் அவலங் களுக்கு எல்லாம் அதனை அடிப்படை யாகக் காண்கிறார். இந்தப் பார்வை மார்க்சிய வரலாற்றுப் பொருளியத்தைத் தொட்டு நிற்கவில்லை.

மார்க்சிய வரலாற்றியல், சமூக உல கத்தை முரணியங்கள் நிறைந்த போராட்ட களமாகக் காண்கிறது. இங்கு வர்க்க முரண்பாடும், அதன் அடிப்படையில் எழும் வர்க்கப் போராட்டமும் வரலாற்று அசை வியக்கத்தின் உந்து சக்தியாக அமைகிறது. ஆனால் சாத்தரின் ஆய்வு சமூக உலகத்து முரணியங்களுக்குப் புறம்பாக, பற்றாமை என்ற இருப்புநிலையில் இயங்கியலைப் புகுத்த முனைகிறது. அத்துடன் பற்றா மையை மனித வரலாற்று இயக்கத்தின் எதிர்மறை விதியாகவும் காண்கிறது. இது மார்க்சிய இயங்கியல் நோக்கிற்கு முர ணானதாகும்.

சாத்தரின் *CRITIQUE OF DIALECTICAL REASON* என்ற நூல், மார்ச்சிய வர லாற்றியலின் கருத்துப் பரப்பிற்குள் நின்று மனித மெய்யுண்மையைத் தேடவில்லை. மாறாக அவரது ஆய்வு மார்க்சியத்தின் மையக் கருத்துகளுக்குப் புறம்பாக நின்று மனித வாழ்வையும் வரலாற்றையும் ஒரு துன்பியல் நாடகமாக சித்தரிக்க முனை கிறது. சாத்தரின் இயங்கியற் பார்வையும் சமூக வாழ்வின் எதிர்மறைகளையே முதன் மைப்படுத்த முனைகிறது. பற்றாமை என்ற கருத்துருவமும் இந்தக் கைங்கரியத் தையே செய்கிறது. இந்த நூலில் அவர் கையாளும் இன்னொரு பூடகமான கருத் தும் மானிடத்தின் அவல நிலையையே எடுத்துரைக்கிறது. செயற் – பொருண்மம் (*PRACTICO - INERT*) என்ற இந்தக் கருத் துருவம்பற்றி இங்கு சுருக்கமாகப் பார்ப் போம்.

பற்றாமையின் இரும்புப் பிடிக்குள் சிக்குப்பட்டிருக்கும் மனிதர்கள் தமது வாழ் நிலைத் தேவைகளை நிறைவுசெய்ய உழைக்கிறார்கள். தனித்தும் கூட்டாகவும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். காலம் காலமாக நிகழ்ந்துவரும் இந்த மனித உழைப்பால், மனித செயற்பாடுகளால், உலகின் பொருளியப் புறநிலை மாறுகிறது. இந்த மாற்றத்தின் விளைவாக ஒரு புதிய பொருளுலகம் தோன்றுகிறது. மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட, மனித படைப்புகளைக் கொண்ட இந்தப் பொருளுலகை செயற்–பொருண்ம உலகம் என வர்ணிக்கிறார் சாத்தர். ஆக்க நோக்கத்துடன், மனிதர் கள் இந்தப் பொருண்ம உலகத்தைப் படைத்தபோதும் அது மனிதர்களுக்கு விரோதமான எதிர்மறைச் சக்தியாக உரு வாக்கம் பெறுகிறது. மனித கட்டுப்பாடு களிலிருந்து விடுபட்டு, தனித்துவம்பெற்ற ஒரு ராட்சத சக்தியாக மனிதர்கள்மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இதனால், தான் படைத்த பொருளுலகத்திற்கே மனிதன் அடிமைப்பட நேர்ந்துவிடுகிறது என்கிறார் சாத்தர். மனிதர்கள் இயந்திரங்களைப் படைக்கிறார்கள். தொழிற்துறை இயந்திர மயமாகிறது. இயந்திர உற்பத்தி உலகம் தோன்றுகிறது. இந்த இயந்திர உலகம் மனித கட்டுப்பாட்டிற்கு மிஞ்சிய பொரு ளிய சக்தியாக வளர்ந்து மனித வாழ் வையே நிர்ணயிக்கும் அளவிற்கு விஸ்வ ரூபப் பரிமாணம் பெற்றுவிடுகிறது. இவ் விதம் உதாரணங்களைக் காட்டி, மனிதன்

படைத்த பொருளுலகம் மனிதனையே ஆட்டிப்படைக்கும் நாசகார சக்தியாக உருப்பெற்றுள்ளதாக சாத்தர் கூறுகிறார்.

தேவைகளை நிறைவுசெய்ய மனிதன் படைக்கும் உற்பத்திச் சாதனங்களும், கருவிகளும், உற்பத்திப் பண்டங்களும், ஒட்டுமொத்தத்தில் மனித உற்பத்தி உலகம் அனைத்துமே அழிவு சக்தியாக, மனிதர்களை நசுக்கும் ஆதிக்க சக்தியாக உருவகம் பெறுகிறது என்ற சாத்தரின் சித்தரிப்பு மிகைப்படுத்தப்பட்டது என்றே சொல்ல வேண்டும். மனித உற்பத்தி உலகத்தை இவ்விதம் எதிர்மறையாகக் காண்பது தவறு. முதலாளியத்தின் கண்மூடித்தனமான உற்பத்திப் போக்கு, பூமியின் வளங்களை அழித்தும், இயற்கையின் சூழலை மாசுபடுத்தியும், மனித வாழ்விற்கு பங்கம் விளைவிப்பதாக அவர் கூறியிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம். அன்றி, மனிதனால் உற்பத்தி செய்யப்படும் நவீன ஆயுதங்கள், மானிடத்திற்கு அழிவை விளைவிக்கும் நாசகாரச் சக்தியாக உருப்பெற்றுவிட்டது என்றால் அதனையும் மறுக்கமுடியாது. ஆனால், மனிதர்களின் உழைப்பு சக்தியால், படைப்பாற்றலால், ஆக்கபூர்வ நோக்கில் கட்டியெழுப்பப்படும் சமூக உற்பத்தி உலகத்தை மனிதர்களுக்கு அந்நியமான ஆதிக்க சக்தியாகக் காண்பது அபத்தமானது.

இந்த நூலில், சாத்தர் நடத்தியுள்ள சமூக விசாரணை, முதலாளிய சமூக உலகத்தின் முரண்பாட்டு முடிச்சுகளை கட்டவிழ்த்துக் காட்டவில்லை. திண்ணியமான சமூக மெய்யுண்மைகளை ஆழமாகப் பார்க்கவில்லை. அவரது ஆய்வு, சமூக அறிவியல் தளத்தில் நிலைகொள்ளாது, மனித வாழ்நிலை அவலங்களை மட்டும் சித்தரிக்கும் இருப்பிய விபரணைகளாகவே அமைகிறது. பற்றாமையின் கோரத் தாண்டவமும், அதனால் எழுந்துள்ள அநீதியும், அராஜகமும், பண்ட உலகத்தின் ஆதிக்க அழுத்தமும், அதன் அழிவுப் போக்குமாக சாத்தர் வரைந்துகாட்டும் மனித உலகம் கொடுமையும் துன்பமும் நிறைந்தது. இந்த உலகத்தில், மனித முனைப்புகளுக்கு அப்பால், பொருளிய எதிர்மறை சக்திகளின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது. இந்த இருண்ட உலகிலிருந்து மானிடத்திற்கு விடிவு இருப்பதாகவும் தெரியவில்லை. மனித விமோசனத்திற்கான நம்பிக்கைகளையும் சாத்தரின் எழுத்து தகர்த்துவிடுகிறது.

சமூக உலகத்தில், தனிமனிதனின் இருப்புநிலைக்கு இடம்தேடும் இந்தப் பரிசோதனை முயற்சி தோல்வியில் முடிகிறது. இதுபற்றி இனிப் பார்ப்போம்.

சாத்தரின் நூல், பற்றாமை என்ற இருப்புநிலையை வரலாற்று இயக்கத்தின் புறநிலைத் தளமாகக்கொண்டு சமூக உலகத்தை ஆய்வுசெய்ய முனைகிறது. எல்லா ஆய்வுகளும் 'வேரிலிருந்து' தொடங்கவேண்டும் என்பது சாத்தரின் நிலைப்பாடு. சமூகம் என்ற விருட்சத்தை தாங்கிநிற்கும் வேர்களாக தனிமனிதர்களை அவர் கருதினார் போலும். ஆகவேதான் சாத்தரின் சமூக விசாரணை தனிமனிதர்களிலிருந்து தொடங்கி சமூக உலகத்தினுள் பிரவேசிக்கிறது. 'மனித செயற்பாடு' என்ற சாத்தரின் கோட்பாடு, தனிமனிதனையும் சமூகத்தையும் இணைக்கிறது. தனிமனிதச் செயற்பாடு மற்றவர்களது செயற்பாடுகளுடன் சங்கமிக்கும்பொழுது, அது கூட்டு— மனித உறவாக, சமூக உறவாகப் பரிணமிக்கிறது. இந்த கூட்டுறவிலிருந்து சமூகக் குழுக்கள் தோன்றுகின்றன இந்த சமூகக் குழுக்கள் பல்வேறு வடிவங்களில், சிறிதும் பெரிதுமான பல்வேறு அமைப்புகளாக இயங்குகின்றன. இவ்விதம் தனிமனிதர்களது செயற்பாடுகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகப் பின்னப்பட்டு

ஒட்டுமொத்த முழுமைபெறும்பொழுது அது சமூகம் என்ற வடிவத்தைப் பெறுகிறது. இந்த வகையில், தனிமனிதர்களைக் கொண்ட கூட்டமாகவே சமூகத்தைக் காண்கிறார் சாத்தர்.

சமூகம்பற்றிய சாத்தரின் வரையறையில் சமூகத்திற்கு மேலாக தனிமனிதனுக்கே முதன்மை கொடுக்கப்படுகிறது. தனிமனிதனை சமூகத்தின் அச்சாணியாக நிறுவிவிடவேண்டும் என்ற முனைப்பில் சமூக உலகத்தின் தனித்துவமான மெய்நிலையை சாத்தர் மறுதலித்துவிடுகிறார். அத்துடன் தனிமனிதச் செயற்பாடுகளின் கூட்டுவடிவமாகவோ, அல்லது தனிமனிதர்கள் கூடிவாழும் கூட்டுக் குடும்பமாகவோ, அன்றி தனிமனிதர்கள் அணிசேர்ந்துகொள்ளும் மக்கள் திரளாகவோ சமூகத்தை சித்தரித்துக்காட்ட முனைவதும் தவறானதாகும். சமூகமானது தனிமனிதர்களின் சேர்க்கையால் உருவாக்கம் பெறுவதல்ல. தனிமனிதர்களை உள்ளடக்கியதாக சமூகம் அமையப்பெற்றபொழுதும், அது தனிமனிதர்களுக்குப் புறம்பான, தனித்துவமான மெய்நிலையைக் கொண்டது. சிக்கலான சமூக உறவுகளால் பின்னப்பட்ட கட்டமைவாக, வரையறுக்கக்கூடிய சில பண்புகளைக்கொண்ட ஒழுங்கமைவாக, சமூக உலகம் அமையப்பெற்றிருக்கிறது. இந்த சமூக மெய்யுலகை தனிமனிதனிலிருந்து, தனிமனிதச் செயற்பாடுகளிலிருந்து தரிசித்துக்கொள்ள முடியாது.

சாத்தரின் சமூக தத்துவம், மார்க்சிய வரலாற்றுப் பொருளியத்தின் அறிவியற் தளத்திலிருந்து எழுதப்படவில்லை. அவரது சமூகப் பார்வை மார்க்சிய சமூகவியலின் அடிப்படைகளுக்கு முரணானதாகவே அமைகிறது. கார்ள் மார்க்ஸ், சமூக உலகத்தை தனிமனிதர்களின் ஒன்றியமாகக் காணவில்லை. மனிதர்களின் பொருளிய வாழ்விலிருந்தும், உறவுகளிலிருந்தும் சமூக உலகத்தை கட்டியெழுப்புகிறார் மார்க்ஸ். மனிதர்களின் பொருளிய வாழ்விற்கு பொருளுற்பத்தியே ஆதாரமானது. பொருளுற்பத்தியின் மையமாக பொருண்மிய அமைப்பு அமைகிறது. எனவே, பொருண்மிய அமைப்பையே சமூகத்தின் திண்ணியமான அடித்தளமாகக் கொள்கிறார் மார்க்ஸ். அவரது ஆய்வில், சமூகமானது, பொருண்மிய அடித்தளத்தையும், அந்த அடித்தளத்தின் மீது நிலைகொண்டு நிற்கும் பல்வேறு சமூக அலகுகளையும் கொண்ட கட்டமைப்பாக உருவாக்கம் கொள்கிறது. இந்தக் கட்டமைப்பை முழுமையுடையதாக, இயங்குநிலையுடையதாக அவர் காண்கிறார். பொருளுற்பத்தித் தளத்தில் எழும் முரணியங்கள் சமூக அசைவியக்கத்தின் உந்துசக்தியாக இயங்கி, சமூக மாற்றத்தை நிகழ்த்தி, மனித வரலாற்றை நகர்த்துகிறது. மார்க்சிய தரிசனமானது, மனித பொருளிய வாழ்வின் மையத்திலிருந்து மனித வரலாற்றிற்கு விளக்கமளிக்கும் ஆழமான சமூகப் பார்வையைக் கொண்டது. மார்க்சிய சமூகவியல் மனிதர்களைத் தனிமனிதர்களாகக் கொள்ளாமல், சமூக உறவுகளைத் தாங்கி நிற்கும் சமூகப் பிறவிகளாகவே காண்கிறது. ''தனிமனிதர்களைக் கொண்டதல்ல சமூகம். சமூக உறவுகளின் ஒட்டுமொத்த முழுமையாகவே சமூகம் அமையப்பெறுகிறது. இந்த உறவுகளையே தனிமனிதர்கள் வெளிப்படுத்தி நிற்கிறார்கள்'' என்கிறார் மார்க்ஸ்.

தனிமனிதனையோ, அகமனிதனையோ (*HUMAN SUBJECTIVITY*) ஆய்வுப் பொருளாக கார்ள் மார்க்ஸ் எடுத்துக் கொள்ளவில்லை. சமூக வாழ்வும், வரலாறுமே மார்க்சிய வரலாற்றுப் பொருளியத்தின் ஆய்வுப் பொருளாகும். எனவே, மார்க்சிய சமூகவியல் புலப்படுத்தும் மனிதன், சமூக சக்திகளால் நிர்ணயிக்கப்படும் சமூக மனிதன். முதலாளிய உற்பத்தி

## வெளிச்சம்

உலகை ஆய்வுசெய்யும் மார்க்சின் 'மூல தனம்', தனிமனிதர்களின் இருப்புநிலையை சமூகக் கட்டமைப்பின் உறவுநிலைகளில் நிலைநிறுத்திவிடுவதைக் காணலாம். இங்கு பொருளிய உறவுகளைத் தாங்கிநிற்கும் மனிதர்களையே நாம் சநதிக்க முடிகிறது. பொருண்மிய கருத்துக்களின் மனிதவுருவங்களாகவே (PERSONIFICATIONS OF ECONOMIC CATEGORIES) 'மூலதனத்தில்' மனிதர்கள் சித்திரிக்கப்படுகிறார்கள். இந்த மனிதர்கள் பொருண்மியக் குறியீடுகளாக, வர்க்க உறவுகளையும் பிரபலித்து நிற்கிறார்கள். முதலாளிய உற்பத்தி உறவுகளும், அதன் முரணியக் கோலங்களும், மனிதர்களை அவ்விதமே நிர்ணயித்துவிடுகிறது என்பது மார்க்சின் வாதம்.

பொருளுற்பத்தி உறவுகளின் சங்கிலிப் பிணைப்பால் கட்டுண்டு கிடக்கும் சமூக மனிதனை, வர்க்க மனிதனை, பொருளாதார மனிதனையே மார்க்சியம் புலப்படுத்திக் காட்டுகிறது என்பது உண்மை. இந்தப் பார்வை, மனிதனை, அவனது அகநிலையின் ஆழத்தில கண்டுகொள்ளவில்லை என்பதும் உண்மை. சாத்தர் கூறுவதுபோல, முழு மனிதனை தரிசித்துநிற்கவில்லை என்பதும் சரியானது. ஆயினும் இதனை வரலாற்றுப் பொருளியத்தின் குறைபாடாகக் கொள்ள முடியாது. ஏனென்றால், வரலாற்றுப் பொருளியத்தின் ஆய்வுப் பொருள் தனி மனிதனுமல்ல, அக மனிதனுமல்ல. மார்க்சிய வரலாற்றியலின் கருத்துருவக் கட்டமைப்பு (CONCEPTUAL STRUCTURE) இவ்வித ஆய்வுக்கு இடமளிக்காது. இந்தக்கட்டமைப்பு சமூக உறவுகளையும் அந்த சமூக உறவுகளில் நிறுத்தப்பட்டிருக்கும் சமூக மனிதர்களை மட்டுமே புலப்படுத்திக் காட்டும். அதற்கு அப்பால் சென்று தனிமனிதர்களின் அகவாழ்வை விசாரணைசெய்ய முயல்வது மார்க்சிய கோட்பாட்டு வரையறைகளை மீறுவதாக அமையும். ஆயினும், மார்க்சிய கோட்பாட்டு வரம்பிற்குள் நின்று அந்தக் கோட்பாட்டுக் கட்டமைவுக்கு ஒத்திசைவாக புதிய கருத்துருவங்களை அறிமுகப்படுத்தி, சமூக சூழலில் தனிமனித உருவாக்கம்பற்றியவிசாரணையை மேற்கொள்வது சாத்தியமானதே. ஆனால் சாத்தரின் ஆய்வு இதனைச் செய்யவில்லை. மாறாக, அவரது சமூக தத்துவம், மார்க்சிய வரலாற்றியலின் அடிப்படைக் கோட்பாடுகளையே திரிவுபடுத்திவிடுகிறது.

மார்க்சிய சமூகவியல் தளத்தில் நின்றுகொண்டு, காலம், இடம், சூழல் என்ற புறநிலைகள், எவ்விதம், தனிமனித சுயத்தின் உருவாக்கத்திற்கு ஏதுவாக அமைகின்றன என்பதுபற்றி சாத்தர் விசாரணை செய்யவில்லை. மாறாக, சமூகப் புறநிலை நிர்ப்பந்தங்களுக்கு அகப்படாத, சுயாதீனமுடைய தனிமனிதனை சமூக உலகில் நிறுத்திக்காட்டுவதே சாத்தரின் நோக்கம். இந்த நோக்கில் அவர் வெற்றிபெறவில்லை. தனிமனிதச் செயற்பாட்டையும் அதிலிருந்து பிரவாகம் எடுக்கும் இயங்கியல் இயக்கத்தையும் அவரது தத்துவம் வலியுறுத்தி நிற்கிறது. அவர் விபரித்துக் கூறும் தனிமனித செயற்பாடும், சராம்சத்தில், சமூக செயற்பாடுதான் என்பதையும், அதுவும் ஒரு குறிப்பிட்ட சமூக, வரலாற்றுச் சூழலில் நிகழ்கிறது என்பதையும் அவர் கண்டுகொள்ளவில்லை. ஒட்டுமொத்தத்தில், சாத்தர் சித்தரிக்கும் மனிதன் சமூக மனிதன் அல்ல. சமூகக் குழுவில் ஒருவனாக, சமூகத் திரளில் ஒருவனாக, தனி மனிதனை, சமூக உலகத்தில் அவர் சஞ்சரிக்கவிட்டபோதும், சமூகப் பொருளிய வாழ்வில் காலூன்றி நிற்காதவனாக, சமூக உறவுகளில் சிக்குப்படாதவனாக, சமூகத்திற்கு அந்நியனாக, தனியனாகவே அவர் மனிதனை சித்திரிக்கிறார். ஆகவே, மார்க்சியமும் இருப்பியமும் இணைந்து, அகநிலையும் புறநிலையும் புணர்ந்து, உருவாக்கம்பெறும் சாத்தரின் இலட்சிய மனிதனை, முழு மனிதனை, வரலாற்று மனி

தனை, இந்தத் தத்துவார்ந்த நூலில் நாம் காணமுடியாது.

சாத்தரின் பிந்திய படைப்புகள் தனி மனித சுயாதீனத்தை பிரகடனம்செய்து நிற்கவில்லை. காலத்தை விஞ்சி எழும் விழிப்புணர்வையும் விடுதலையையும் வலியுறுத்தவில்லை. எல்லா மனிதர்களுமே காலத்தின் கைதிகள் என்ற உண்மையை இறுதியில் சாத்தரால் மறுதலிக்க முடியவில்லை.

மூவாயிரம் பக்கங்களைக்கொண்ட ஒரு நீண்ட வாழ்க்கைச் சித்திரமாக, குஸ்ராவ் புளோபேர்ட் *(GUSTAVE FLAUBERT)* என்ற நாவலாசிரியரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார் சாத்தர். 'குடும்பத்தின் முட்டாள்' *(IDIOT OF THE FAMILY)* என்ற தலைப்பில் 1966ம் ஆண்டு இந்தப் படைப்பு வெளியாகியது. ''இது ஒரு தனிமனிதனின் முழுமையான வாழ்க்கைச் சித்திரம்'' என்று முகவுரையில் குறிப்பிடும் சாத்தர், இருப்பிய, மார்க்சிய கருத்துக்களை மட்டுமன்றி பிரைய்டின மனப்பகுப்பியலையும் தனது ஆய்வுக்கு துணைசேர்க்கிறார். காலம், இடம், சூழல் என்ற புறநிலைகள் ஒரு எழுத்தாளனின் உணர்வு நிலையிலும், உலகப் பார்வையிலும் விழுத்தும் தாக்கங்களை இந்தப் படைப்பில் மிகவும் ஆழமாக எடுத்து விளக்குகிறார் சாத்தர். இந்த வாழ்க்கை வரலாற்றுச் சித்திரத்தில், பிறைய்டின் கருத்தாக்கமே மேலோங்கி நிற்கிறது. சமூக உறவுநிலைகளில், குடும்ப சூழ்நிலையையும், சிறுபராய வாழ்வையும் முதன்மைப்படுத்தும் சாத்தர், குடும்ப உறவுநிலைகளில் பதியும் அனுபவ வடுக்கள், புளோபேர்டின் அகவுணர்வுகளையும் ஆளுமையையும் மட்டுமன்றி அவரது புறவுலகப் பார்வையையும் நிர்ணயித்திருப்பதாக விளக்குகிறார்.

இந்த நூலின் பெரும் பகுதி புளோபேர்ட்டின் சிறுபராய வாழ்க்கை வரலாற்றையே ஆழமாகப் பார்க்கிறது. 468 பக்கங்களைக்கொண்ட முதலிரண்டு அத்தியாயங்களும் அவரது சிறுபராய குடும்ப அனுபவங்களையே மிகவும் நுணுக்கமாக விசாரணை செய்கிறது. வயதுவந்தோரின் போக்கையும், பார்வையையும், உணர்வு நிலையையும் சிறுபராய அனுபவ சிக்கல்களில் கண்டுகொள்ளும் பிராய்டின் ஆய்வு முறைமையைத் தழுவி இந்த உள்ளார்ந்த தேடுதலை நடத்துகிறார் சாத்தர். சிறுபராய அனுபவ வேர்களிலிருந்தே புளோபேர்ட்டின் இலக்கியப் படைப்புலகத்திற்கும், படைப்பாற்றல் ஆளுமைக்கும் விளக்கங்கள் கொடுக்கப்படுகிறது.

புறவுலக அனுபவங்களை மனித மனம் உள்வாங்கிக்கொள்கிறது அகவயப்படுத்திக்கொள்கிறது. குடும்ப சூழலாலும், தனிப்பட்ட உறவுகளாலும் அகவயப்படுத்தப்படும் அனுபவத் திரட்சியாகவே ஒருவனது சுயமும் ஆளுமையும் உருவாக்கம்பெறுகிறது. ஒருவனது படைப்பாற்றலும் சுயானுபவத்திலிருந்தே ஊற்றெடுக்கிறது. புளோபேர்ட்டும், சமூக உலகத்திலிருந்து, புறவுலகச் சூழலிருந்து தான் உள்வாங்கியதை எல்லாம் தனது சுயானுபவப் பட்டறையில் புடம்போட்டு எடுத்து, அந்த உள்ளார்ந்த அனுபவத்திற்கு எழுத்துவடிவில் புறவடிவம் கொடுத்திருக்கிறான் என்கிறார் சாத்தர்.

ஒட்டுமொத்தத்தில், இந்த வாழ்க்கை வரலாற்றுச் சித்திரம் ஒரு செய்தியைச் சொல்கிறது. அதாவது, காலமும் சூழலும் மனிதனை உருவாக்கம் செய்கிறது என்ற உண்மையைச் சொல்கிறது. □□

*'அபத்தமும் அர்த்தமும்'*

*என்ற இந்தக் கட்டுரைத் தொடர் இத்துடன் நிறைவடைகிறது.*

*அடுத்த இதழில் பிரம்மஞானி புதிய கட்டுரையொன்றுடன் உங்களைச் சந்திக்கின்றார்.*

## நேர்காணல்
**கோகிலா மகேந்திரன்**

நேர்முகம்
**கருணாகரன்**

கோகிலா மகேந்திரன் என்று எங்கும் எல்லோராலும் அறியப்பட்ட இவர் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றி வருபவர். தொடர்பறுந்து போகாமல், இடையில் எழுத்துலகிலிருந்து மறைந்து போகாமல் தொடர்ந்து எழுதி வரும் ஈழத்துப் பெண்படைப்பாளி என்ற பெயர் இவருக்குண்டு. வெறும் எழுத்துடன் திருப்தி கொள்ளாது தான் நினைக்கும் கருத்தை வென்றெடுப்பதற்காக பல சமூக அமைப்புகளுடன் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றி வருபவர். தமிழரின் பண்பாடு என்று சொல்லி மூடத் தனத்துக்குள் தன்னைப் புதைக்காமலும், பெண்களின் விடுதலையென்று சொல்லி ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரும் கட்டற்ற சுதந்திரத்தை ஏற்றுப் பறக்காமலும் எமது மண்ணுக்கேற்ற தளத்தில் நின்று பெண்களின் விடுதலைக்காகச் சிந்திப்பவர். எமது தேசிய இன விடுதலைப் போராட்டத்தை உள்ளத் தெளிவுடனும், உணர்வுடனும் ஏற்றுக் கொண்டவர்களில் இவரும் ஒருவர். அறிமுக விழா, முரண்பாடுகளின் அறுவடை, மனித சொரூபங்கள், பிரசவங்கள் ஆகிய சிறுகதைத் தொகுதிகளும், துயிலும் ஒரு நாள் கலையும், தூவானம் கவனம் ஆகிய நாவல்களும் இது வரை வெளிவந்த இவரின் நூல்களாகும். புதிய நாடகத் தேடல்களிலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடுண்டு.

*உங்கள் குடும்பச் சூழல், மற்றும் இலக்கிய ஈடுபாட்டின் பின்னணி பற்றிக் கூறுங்கள்?*



*●● எனது கிராமம் விழிசிட்டி. தெல்லிப்பழையின் தென்மேற்குப் பகுதியில் அமைந்த வாழையும் கமுகும் வெற்றிலையும் நிறைந்த அழகிய சிறு கிராமம். மழைகால அருணோதயம் போன்ற வாழ்வு. கிராமத்தவர் அநேகம் பேர் சைவ உணவுக்காரர். மென்மையான கலை உள்ளம் படைத்தவர்கள். தேவாரங்களைப் பண்ணோடு இசைப்பதில் புகழ் பெற்றவர்கள். நான் சிறுமியாக இருக்கும்போது வாழ்ந்த பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை, பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை போன்றோர் ஏனையோரின் மரபு இலக்கிய ஈடுபாட்டுக்கு வழிகாட்டிகள். எனது தந்தையார் பண்டிதர் கதிரிப்பிள்ளையின் மாணவர்.*



பொது நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

அதிபர். பாரம்பரிய இலக்கியங்களில், புராணங்களில் அறிவு மிகுந்தவர். சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் சாவித்திரியாக நடித்தவர்.
நாள்தோறும் அவருடன் காலையில் கிணற்றடியில் குளிக்கும்போது எனக்குத் ''திருக்குறள்'' பாடம் நடக்கும். துலா மிதித்து இறைக்கும் போது அவரும் சிறிய தந்தையாரும் பாடும் தேவாரங்களும் இசை நாடகப் பாடல்களும் காதில் விழும்.
இயல்பாக வந்த இந்தப் பின்னணிக்கு 'மகாஜனா'க் கல்லூரி உரம் போட்டு வளர்த்தது.
செ. கதிரேசர்பிள்ளையிடம் தமிழ் படித்தபோது அதன் வளர்ச்சி சிறப்பாய் அமைந்தது. அவரது நாடகங்களில் நடித்து அகில இலங்கை ரீதியாக முதற் பரிசுகளைப் பெற்றபோது கலை ஈடுபாட்டின் மகிழ்வு பிடிபட்டது.
உலக செளந்தர்யங்கள் யாவும் எங்களுக்குள் நிறைந்துவிட்ட திருப்தி!
ஆண்டு எட்டில் நான் படித்தபோது எனது தமிழ் விடைத்தாளைத் திருத்திய ஒரு ஆசிரியை, ''இந்தப் பிள்ளை ஒரு எழுத்துப் பிழைகூட விடவில்லை.
கட்டுரையும் மிகச் சிறப்பாய் உள்ளது. நூறு புள்ளி போடலாமா?''
எனக் கவிஞரிடம் கேட்டபோது, ''அவளுச்கு நீங்கள் நூறு புள்ளி போடாவிட்டால் நான் ஏன் என்று கேட்டிருப்பேன்''
என்று அவர் சொன்னாராம். நல்ல சூழல் வாய்த்தது நான் பெற்ற அதிர்ஷ்டம்!

□□ பல பெண்கள் கலை, இலக்கிய முயற்சிகளிலும்,பெண்ணியச்செயற்பாட்டிலும் ஆரம்பத்தில் முனைப்புடன் ஈடுபடுவார்கள். ஆனால் திருமணத்தின் பின்னர் இவர்களின் செயற்பாடுகள் அநேகமாக இல்லாமல் போவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தப் பின்வாங்கலின் காரணம் என்ன?

●● இதன் விடை கேள்விக்கு உள்ளேயே உண்டே!
திருமணத்தின் பின்னர் ஒரு மாற்றம் ஏற்படுகிறதென்றால் அதற்குக் காரணம் திருமணமாகத்தானே இருகக முடியும்?
வேலைத் தலத்தில் இருந்து கணவன் களைத்து வருவதை எதிர்பார்த்து கையில் மணம் மிகுந்த கோப்பியும், தலையில் பூவுமாகக் காத்திருக்கும் பெண்ணைத்தான் இலட்சியக் கதா நாயகியாக ஆண்கள் மட்டுமில்லைப் பெண்களும் காட்டினார்கள்.
கணவனைத் திருப்திப்படுத்துவதும், அவன் சொற்படி நடப்பதும், அவனது வெற்றிக்கு உறுதுணையாக இருப்பதுமே ஒரு பெண்ணின் கடமை என்று பெண்ணும் நம்புகிறாள். அதனால் தனது சொந்தத் திறமைகளையும், ஆளுமையையும் ''தியாகம்'' என்ற குழியில் போட்டு மூடி விடுகிறாள்.
பல நூற்றாண்டு காலமாக எமது இலக்கியங்களும், பாரம்பரியப் பாதைகளும் அழுத்தி வந்த விடயம் இது. இலகுவில் மாறிவிடாது.
கட்டிளமைப் பருவத்தில் இருக்கின்ற முனைப்பான செயற்பாடுகளும் சிந்தனையும் அந்தக்காலம் முடியக் கூர் மங்கிப் போவதும் ஒரு காரணமாக இருக்கலாம்.
இந்தக் கருத்தை மையப்படுத்தி, ''இருட்டுக்குள் சுருட்டி'' என்றொரு நாடகத்தை நாங்கள் அண்மையில் தயாரித்தோம்.
ஆனால் என்னைப் பொறுத்த வரையில், திருமணம் எனது ஆளுமை வளர்ச்சிக்கு மிக வசதியாய் அமைந்தது.

# வெளிச்சம்

□□ இன்று பெண்களின் ஆற்றல், ஆளுமை, வாழ்க்கை முறை என்பன நமது மண்ணில் நிறைய வளர்ச்சி கண்டிருக்கிறது. எனினும் சராசரி யான மரபு வழியான பணிதல் நிலை யும் இன்னொரு பக்கத்தில் ஒரு பேணு கையாக இன்னும் உண்டு. இந்தப் பிரச்சினையில் உங்கள் அவதானிப்பு என்ன?

●● தேவை வரும்போது நடத்தை மாற்றம் வருவது இயல்பு. இன்று எமது இனத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவை கொண்டு வந்த பல மாற்றங்களில் பெண்களின் மனப் பாங்கு மாற்றமும் ஒன்று. ஆனால் எல்லாரும் மாறி விடவில்லை. கண்ணகியும் நளாயினியுமே இன்றும் எமது இலட்சியப் பெண்களாக எடுத்துப் பேசப்படுகிறார்கள். தமது சொந்தக் காலில் நின்று, தாமே தீர்மானம் எடுத்து, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டும் பெண்கள் பற்றிக் காவியங்கள் எழுதப்பட வேண்டும். அவை பற்றிச் சமுதாயத்தில் எடுத்துப் பேசப்பட வேண்டும். மாற்றம் தொடரும். எனக்கு நிறைய நம்பிக்கை உண்டு. ஆனால் ஒரு இரவுக்குள் எல்லாவற்றையும் மாற்றிவிட முடியாது.

□□ ஈழத்தில் கலை இலக்கியத் துறையில் ஈடுபட்ட பெண் எழுத்தா ளர்கள் மிகவும் குறைவ என்றும், இவ்வாறு எழுதப் புறப்பட்டவர்களில் ஒரு சிலர் தவிர ஏனையோர் ஜன ரஞ்சகப் படைப்புகளையே தந்து சென் றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. இது எந்த அளவுக்கு நியாயமானது?

●● இந்தப் பிரச்சினை இங்கு மட்டுமில்லை. தமிழகத்திலும் பேசப்படுவதுண்டு. ''பெண் எழுத்தாளரிடம் அறிவு பூர்வமான சிந்தனைகளையோ, தர்க்கரீதியான கருத்து ஆராய்வுகளையோ எதிர்பார்ப்பதற்கில்லை என்று நமது தமிழ் நாட்டின் புகழ்பெற்ற இலக்கிய விமர்சக மேதைகள் சிலர் தீர்த்திருக்கிறார்கள்''



என்று ராஜம் கிருஸ்ணன் சொல்கிறார். ஈழத்தில் இலக்கியத் துறையில் ஈடுபட்ட பெண் எழுத்தாளர்கள் மிகவும் குறைவு என்பது உண்மைதான். ஒரு இலக்கியக் கூட்டத்திற்கு எத்தனை பெண்கள் வருகிறார்கள்? சங்கீதம், நடனம் போன்ற கலைகளில் ஓரளவு ஈடுபடுகிறார்கள். ஆனால்

நாடகக் கலையில் ஈடுபடுபவர்கள் குறைவு.
ஆண் ஆதிக்க சமுதாயக் கட்டமைப்பு
இன்னும் பேணப்படுவது தான்
எல்லாவற்றிற்கும் காரணம்.
ஒரு சமுதாயத்தில் நூற்றுக் கணக்கான
பெண் எழுத்தாளர்கள் தோன்றும்
போதுதான் ஒரு சிலர் மிகத்தரமாக
எழுதும் நிகழ்தகவு ஏற்படும்.
ஆயிரக் கணக்கான ஆண் கவிஞர்கள்
தோன்றிய பிறகுதான் இங்கு
'மகாகவி' போன்ற ஒரு தரமான
கவிஞனையோ அல்லது
புதுவை இரத்தின துரை போன்ற
ஒரு விடுதலைக் கலைஞனையோ
நாங்கள் தரிசித்தோம்.
எடுத்த எடுப்பில் மிகத்தரமான
ஒரு பெண் எழுத்தாளர்
தோன்ற முடியாது. அதற்குப் பல
ஆரம்பப் படிகள் தேவை.
ஆனால் ஜனரஞ்சகப் படைப்புக்களைப்
பெண்கள் மட்டுந்தான் எழுதினார்கள்
என்று குற்றம் சுமத்த முடியாது.
அவ்வாறு விட்டுச் சென்ற
ஆண்களும் நிறைய உள்ளனர்.
அதே சமயத்தில் தமிழ் நாட்டுடன்
ஒப்பிடுகையில் ஜனரஞ்சகப் படைப்புகள்
வரும் வேகம் இங்கு குறைவு
என்பதையும் கவனத்தில்
கொள்ள வேண்டும்.

□□ அரசியல் பொருளாதாரக் கட்டமைவில் எமது மண்ணில் பெண்களின் ஆளுமை விருத்தியும் பங்கும் இன்று முன்னேற்றமாக இருக்கிறது. ஆனால் இந்த முன்னேற்றச் செயற்பாடுகள் சார்ந்த இலக்கிய வெளிப்பாடுகள் குறிப்பிடக் கூடிய அளவுக்கு வரவில்லை. என்ன காரணம்?

●● அரசியல் பொருளாதாரக்
கட்டமைப்பில் எந்தப் பெண்கள்
பங்கு கொள்கிறார்களோ அவர்கள்
மத்தியில் இருந்து ஆயிரக்கணக்கான
எழுத்தாளர்கள் தோன்ற வேண்டும்.
ஆனால் எமது சமூகம் பொருள்
மையச் சமூகம். பணம் ஈட்டுவதிலும்
அதைச் சேர்த்து வைப்பதிலும்
அதிக நாட்டமுள்ள இனம்.
பணத்துக்கு அதிக முக்கியத்துவம்
தருகின்ற மனப்பாங்கு
கொண்ட சாதி.
ஸ்பிராங்கர் என்ற உளவியலாளர்
மனிதர்களை ஆறு பெரிய ஆளுமை
வகுப்பினுள் அடக்குவார்.
அதில் நாங்கள், தமிழர் பலர்
பொருளாதார ஆளுமை கொண்டவர்களோ
(The economic type) என்று நான்
நினைப்பதுண்டு.
பொருள் சம்பாதிக்கப்
பெண்களை அநுமதிக்கும்
சமூகம் அவர்கள் கலை, இலக்கியங்களில்
ஈடுபடுவதை விரும்புவதில்லை.
அவர்கள் Oesthetic type ஆக மாறுவதை
அநுமதிப்பதில்லை. அது தேவையில்லாத
"ஆட்டம்" என்பதுதான் சமூகத்தின்
கணிப்பு.
ஆகவே இந்த மனப்பாங்கு
மாற்றப்பட வேண்டும்.

□□ உங்கள் அண்மைக்கால எழுத்துக்களில் உளவியல் பார்வை அல்லது உளவியல் கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன. உளவியல் கருத்துக்களை நேரடியாகக் கூறுகின்ற இடங்களில் விவரணப் பாங்கு மேலோங்கும் சாத்தியம் தெரிகிறது. இது பற்றி உங்களின் கருத்து என்ன?

●● அண்மையில் 'நான்சி பரன்'
என்ற அமெரிக்க உளவியல் பேராசிரியை
இங்கு வந்திருந்தார்.
அவர், "குட்டி யானை துணிவு
பெறுகிறது" என்று ஒரு

# வெளிச்சம்

உளவியல் புனைகதை எழுதி-
(Psychological fiction)
அந்தக் கதையைச் சொல்வதன்
மூலம் போரினால் பாதிக்கப்பட்ட
மக்கள் மத்தியில் ஒரு உளச்
சிகிச்சையைச் செய்ய விரும்புகிறார்.
எங்கள் நாட்டில் இவ்வாறு உளவியல்
புனைகதை எழுதும் எழுத்தாளர்கள்
யாரும் இல்லை.
இன்று இது எமக்கு ஒரு
கட்டாயத் தேவை.
இத்தகைய கதைகளோடு
நாங்கள் பலர் எங்களைப் பொருத்தி
இனம் காண்போம். இதன் மூலம்
ஒரு உளச் சமநிலை பேணப்படும்.
என்னுடைய கதைகளில் விவரணப்
பாங்கு மேலோங்குகிறதோ இல்லையோ
என்பதை விமர்சகர்களே கூறவேண்டும்.
ஆனால் எமது சமுகத்துக்குப்
பயனுள்ள ஒன்றைச் செய்கிறேன்
என்ற திருப்தி எனக்கு இருக்கிறது.
எல்லாரும் அரைத்த மாவை
அதே போலத் திருப்பி
அரைப்பதில் என்ன இருக்கிறது.

அதாவது படைப்பாளி தன் நியாயத்திற்கு உரியவகையில் தன் மனதுள் திரண்டுள்ள தீவிரமான எண்ணங்களை வெளிப்படுத்துவதுடன் பணி நிறைவடைகின்றது. என்பது தானே பொருள்?

படைப்பாளி தன் நியாயத்துக்கு
உரிய வகையில் தன் மனதுள் திரண்டுள்ள
எண்ணங்களைச் சமுக மேம்பாட்டுக்கு
ஊறு செய்யாத வகையில்
வெளிப்படுத்த வேண்டும். அதன்
கலைத்துவச் சிறப்பு அதன் தரத்துக்கு
நேர்விகித சமனாகும்.

இன்று உங்கள் வீட்டையும் கிராமத்தையும் இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. ஒரு படைப்பிலக்கிய வாதியின் உணர்வு, பிரச்சினை என்பவற்றினூடாக இந்தப் பாதிப்பைக் கூறுங்கள்:

எங்கள் கவிஞர் ஒருவரின்
வார்த்தையில் சொல்வதானால்,
''எவ்வாறிது ஆறும்? என்
சொல்லித் தேறும்?''
என்று கூறினால் போதும்.
எல்லாத் தோற்றங்களும்
திடீரென்று ஒரு சமயத்தில் இல்லாது
விட்ட ஒரு தோற்றம்.
கிராமத்தின் வடக்கு எல்லையில்
அமைதியாய்க் குந்தியிருந்த வீடு!
மனத்தரையில் நினைவுப் பம்பரம்
படு வேகமாய்ச்
சுற்றுகிறது.
வீட்டின் தெற்கு எல்லையில்
உள்ள மாஞ்சோலை.
அங்கே வரும் அழகழகான குருவிகளை
நானும் அப்போது சிறு பாலனாய்
இருந்த என் மகனும் பார்த்து
அவற்றுக்குப் பின்னே
ஓடித்திரியும் நினைவுகள்!
வீட்டின் மேற்கு எல்லையில்
அமைந்த பொற்காற் தம்பை
வைரவர் ஆலயம்! அதன் சூழலில்
மிகப்பெரிய அரசுகள்!
ஆல மரங்கள்!!
வீட்டில் இருந்து ஒரு கால் மைல்
தூரத்தில் நாங்கள் புல்லுக்கும்
விறகுக்கும் போகின்ற
''நிறையப்புலம்''. மழை காலத்தில்
அங்கே நெஞ்சைத் தொட்டு
நிற்கும் 'குதிரை வாலிப் புல்லு.
அங்கே பறக்கும் பட்டங்கள்.
கிழக்கே ஒரு காணி தள்ளி
ஒரு வாழைத் தோட்டம்...
கிராமத்தில் அனைவரும் உறவினர்
என்பதால் இரவு பகல் பாராமல் திறந்து
விரித்தபடியே கிடக்கும் படலைகளும்

கதவுகளும் .. யார் எப்போது
வந்தாலும் சாப்பாடு கொடுத்தே
அனுப்புகிற வழக்கம்... —
எல்லாம் இழந்து...—
ஆத்மாவில் ஒரு பொறி
இன்னும் அழியாமல் கனன்று
கொண்டிருக்கிறது!
இப்போது இருக்குமிடத்தில்,
யாராவது விருந்தினர் வந்தால்
''அமருங்கள்'' என்று சொல்ல
முடியாமல் அவர்களை (ஏன்
உங்களையுந்தான்!)
வெளியே முற்றத்தில் அமர
வைக்க வேண்டிய நிலை!
'எழுத்தாளர்' எனக்கு
ஒரு மேசை போட முடியாத
''இடவசதி!''. விழிசிட்டியில்
விடப்பட்டவை போக, மீதியாக
உள்ளபொருள்களிலும் தளபாடங்கள்
சில சுதுமலையில், புத்தகங்கள் பல
கரவெட்டியில். நாங்கள்
இணுவிலில்!
இந்த இழப்பின் தாக்கம் மிகப் பெரிது.
''குருவி கூவ மறந்ததோ?''
நாடகத்தின் மூலமும், 'முகாமுக்குப்
போகாத அகதிகள்',
''மனதையே கழுவி'' போன்ற
சிறுகதைகள் மூலமும் ஒரு சிறு பகுதி
முட்டைத் தீர்த்துள்ளேன். ஆனால்
பெரும் பகுதி ஆழ் மனதில்
புதைக்கப்பட்டுள்ளது. எப்போது
எப்படி வெளிவரும் என்று சொல்ல
முடியாது.

□□ இன்றைய எமது வாழ்வுடன் போராட்டமும்,மனிதஉறவு நிலையில் போராளிகளும் ஒன்றிணைந்ததன்மை உண்டு. இந்த அம்சங்களை உள்ளடக்கும் இலக்கியங்கள் அவற்றுக்குரிய சிறப்பியல்புடன் வெளிவருவதே இனிவரும் பெறுபேறு எனக் கூறப்படுகிறது. இந்தக் கூற்றில் உங்கள் கருத்து என்ன ?

●● சரிதான். வாழ்வுதான்
இலக்கியமாகும். இயல்பாக அது
அப்படித்தான் வரும்.
வரவேண்டும்.

□□ நமது இன்றைய சிறுகதை, நாவல் இலக்கியத்தின் போக்குப் பற்றிக் கூறுங்கள் ?

●● வாழ்வும் போராட்டமும்
பிரிக்க முடியாமல் இணைந்து
போனதால் பெரும்பாலான
சிறுகதைகள் அப்போராட்ட வாழ்வைப்



பற்றிக் கூறுகின்றன. சில
கதைகள் சிறப்பான கலையம்சத்துடன்
வருகின்றன. பெரும்பாலானவை
போராட்டத்தைப் பற்றி எழுத
வேண்டும் என்ற ஆர்வம் மட்டும்
கொண்ட கதைகள்
ஆகிவிடுகின்றன.
அடிப்படைத் தேவைகளை நிறை
வேற்றுவதில் சிக்கல் கொண்ட,
அமைதியற்ற, அந்தரமும் பதற்றமும்
நிறைந்த வாழ்வு நாவல் எழுத

உகந்த சூழ்நிலையாக இல்லாததாலோ
என்னவோ வெளிவரும் நாவல்களின்
எண்ணிக்கை குறைந்துள்ளது.
காகிதத் தட்டுப்பாடும்
ஒரு காரணம்.
ஆழமான மன எழுச்சிகளைத்
தருகின்ற துன்பமே எப்போதும்
அற்புதமான இலக்கியங்களின்
தோற்றத்துக்குக் காரணமாய்
இருந்துள்ளன. இரண்டாம் உலகப்
போரின் பின் எழுந்த இலக்கியங்கள்
இதற்கு நல்ல சான்று.
இந்த வகையில் இந்தமண்ணிலும்
இந்தச் சூழல் மிகச் சிறந்த
இலக்கியங்களைத் தோற்றுவிக்கும்.
அத்தகைய ஒரு காலம்
தானாகக் கனிந்து வரும்.
என்னைப் பொறுத்த வரையில்
இடம் பெயர்ந்த நிலையும்,
எனது குடும்பத்தின் பொருளாதாரத்
தாக்கமும் நாவல் எழுதும்
எனது ஆவலைத் தற்காலிகமாக
மழுங்கடித்துள்ளன.
1982ம் ஆண்டு முதல், வருடம் ஒரு நூல்
வெளியிடுவது என்ற ஒழுங்கான
திட்டத்தின் கீழ் செயற்பட்டு
வந்த நான்
1987இல் போர்ச் சூழல் மிக இறுக்கமான
நிலையோடு எல்லாவற்றையும் கைவிட
வேண்டியதாயிற்று.

இன்றைய எமது இலக்கிய விமர்சனத்தின் போக்கும் வளர்ச்சியும் பற்றிய உங்கள் அபிப்பிராயம்?

விடுதலைப் போராட்டம் என்ற
இலட்சிய வேள்வி நடைபெறும்போது
தனிமனித சுதந்திரப் பாதிப்புகள்
சில இருக்கத்தான் செய்யும்.
அந்த வகையில் இலட்சியப் பற்றுள்ள,
சமுதாயத்தை முன்னோக்கித் தள்ளும்
குறியுள்ள இலக்கியங்களில் கலைத்துவப்
பண்பும், உத்திச் சிறப்பும், வடிவ அழகும்
சற்றுக் குறைவாய் இருந்தாலும்
மொத்தச் சமுதாய நன்மை கருதி
விமர்சகர்கள் அக்குறைபாட்டைப்
பெரிது படுத்தாது உற்சாகப்படுத்துகிற
ஒரு நிலை காணப்படுகிறது.
அது சரியான நிலைப்பாடு என்றே
நான் கருதுகின்றேன்.

இந்த நிலை படைப்புத்துறை பற்றிய சரியான கணிப்பீட்டை வழங்குமா? விமர்சனத்தின் தன் மையில் தளர்வோ, சார்போ விரும் பப்படுவதில்லையே?

ஒரு விடயத்தைத் தெரிந்து
கொள்ளாமல் தவறு செய்பவன்
திருந்திக் கொள்ள வேண்டும்.
தெரிந்து மீறுகிறவன் –
பிரக்ஞைபூர்வமாக நல்ல நோக்கத்துக்காக
மீறுகிறவன் – பாராட்டப்பட
வேண்டியவன்.
பிள்ளை வருத்தமாக இருக்கும்போது
பத்தியம் கொடுக்கிறோம் என்றால்...
நல்ல புரத உணவு சமைக்கத்
தெரியாமல் இல்லை.
முதலில் நோய் மாற வேண்டும்.
அது முக்கியம்.

நீங்கள் நாடகத் துறையிலும் ஈடுபாடு கொண்டவர். சிறுவர் அரங் கில் உங்கள் கவனம் அதிகமாக இருக்கிறது. இன்றைய நமது சூழலை யும் சிறுவருக்கான பிரச்சினை களையும் நமது சிறுவர் நாடகங்கள் கருப் பொருளாக்குவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

சிறுவர் நாடகங்களின்
கருப் பொருள் அவர்களின் சிந்தனைக்கு
எட்டக் கூடியதாகவும் அவர்களிடத்தில்
நல்லதோர் மனப்பாங்கைத்
தோற்றுவிக்கக் கூடியதாகவும் இருத்தல்

## வெளிச்சம்

மிக அவசியம். சிறுவரின் பிரச்சினைகள் நாடகமாக்கப்படலாம். அரங்கில் சிறுவர் மிக விரும்பும் ஆட்டம், பாட்டு, விளையாட்டு என்பன விரவி இருத்தல் வேண்டும் எனவும், அரங்கு சிறுவர் விரும்பும் விடயங்களைக் கொண்டு கவர்ச்சியாக்கப்பட வேண்டும் என்றும் விடயம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.
என்னைப் பொறுத்த வரையில் போர்ச் சூழலில் சிறுவர் பெற்றுள்ள உளப் பாதிப்புகளை அவர்களின் மன இறுக்கங்களைக் குறைவடையச் செய்யும் ஒரே ஒரு நோக்கத்துக்காகவே நாடகங்களைச் செய்கிறேன்.
எனது பாடசாலையில் சுமார் நூற்றைம்பது பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு, அன்பு என்ற அடிப்படைத் தேவைகளே முழுமையாகப் பூர்த்தியாக்கப்படாத நிலை. இந்தப் பிள்ளைகள் ''வீட்டுவேலை'' செய்யவில்லை என்று அல்லது பரீட்சையில் அதிக புள்ளி எடுக்கவில்லை என்று நாங்கள் அவர்களைத் தண்டிப்போமாயின் எங்களை விட முட்டாள்கள் வேறு இருக்க முடியாது.
அவர்களது உள்ளத்திற்கு ஒத்தடம் தேவைப்படுகிறது. அவர்களின் உணர்வுகளுக்கு வடிகால் தேவைப்படுகிறது. டி.வி, வானொலி போன்ற பொழுது போக்குகள் எதுவும் அற்ற இறுக்கமான இந்தச் சூழலில் கலை மூலமாவது அவர்களைக் கொஞ்ச நேரம் தளர்வாக இருக்கச் செய்கிறேன்.
இதுவே இன்று ஒரு கலைஞன் செய்யக் கூடிய மிகப் பெரிய பணி என்பது எனது கருத்து.

**□□ நவீன நாடகம் பற்றிய விழிப் புணர்ச்சி எந்த அளவுக்கு நமது பார்வையாளரிடம் சென்றுள்ள உங்கள் நாடகங்கள் இதில் எந்த வகையான பங்காற்றியிருக்கின்றன?**

●● நவீன நாடகம் பற்றிய விழிப்புணர்வு எமது பார்வையாளரிடம் போதாது என்பது உண்மைதான். அதைப் படிப்படியாக வார்த்தெடுக்க வேண்டியது நாடக அறிஞர்களின் கடமை.
உலக நாடக அரங்கு எங்கோ வெகு தொலைவுக்கு வளர்ந்து விட்டது. நாங்கள் நிமிர்ந்தாவது பார்க்கத்தான் வேண்டும்.
என்னைப் பொறுத்த வரையில் கலை, இலக்கியத் துறையில் விமர்சகர்கள் பாராட்டும்படி பெரிதாக எதையும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் 1987க்கு முன் இருந்தது உண்மைதான். இன்று என்னைச் சுற்றி நிறைந்துள்ள துன்பம் என்னை வதைக்கிறது. *Self-actualization* என்பது எங்கோ எட்டாமல் செல்வது போலிருக்கிறது.
எனது நண்பர்கள், உறவினர்கள், மாணவர்களின் துன்பத்தையும் எனது துன்பத்தையும் குறைக்கும் ஒரு ஊடகமாகவே நான் நாடகத்தைப் பயன்படுத்துகிறேன் (நடிகர், பார்வையாளர் இரு பகுதியினரும் நன்மை பெறுகிறார்கள்)
மனதுக்குப் பெரிய அமைதி தருகின்ற பணி இது! □□

நூல் விமர்சனம்

# வானம் எம்வசம்

—அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது பற்றிய கவிதைப் பதில் குறிப்புக்கள்

● தமிழ்த்தாய் வெளியீட்டகம், யாழ்ப்பாணம். ● விலை: ரூபா 35 ●

கா. சி

இவ்வருடம் ஏப்ரில் 28, 29 ம் திகதிகளில் விடுதலைப் புலிகள், இலங்கை அரசுக்குச் சொந்தமான இரண்டு அவ்ரோ விமானங்களை நாளுக்கொன்றாக சுட்டு வீழ்த்தியமை, நடந்து கொண்டிருக்கும் இனப்போராட்டத்தில் ஒரு முக்கிய திருப்பு முனையாகும்.

இந்தச் சுட்டு வீழ்த்துகை இராணுவ உபாயத்தில் எத்துணை முக்கியம் பெறுகின்றதோ அத்துணை முக்கியத்துவம், மக்கள் உணர்வுப் பதில் குறிப்பு வெளிப்பாட்டிலும் பெற்றுள்ளது. ஏனெனில் இனப் போராட்டத் தாக்குதல்களில் ஆகாய விமானம் எதிர்கொள்ள முடியாத தாக்குதல்களின் சின்னமாக விளங்கிய ஒன்றாகும். இதுவரைகாலமும் எதிர்கொள்ளப்படமுடியாது விளங்கிய ஒரு சக்தி எதிர்கொள்ளப்பட்டு மேலாண்மை செய்யப்பட்டபொழுது அது பற்றிய மக்கள் நிலைப்பதில் உணர்ச்சிகள் யாவை என்பதை எடுத்துக்காட்டுவனவாகவுள்ளன இவை. 29 கவிஞர்கள் எழுதிய 30 கவிதைகள் இத்தொகுப்பிலே இடம் பெற்றுள்ளன.

ஆக்க இலக்கியத்தில் உணர்ச்சிகளை எடுத்துக் கூறுவதற்கான இயல்பான சாதனம் கவிதையே. அது உணர்ச்சியின் மொழி. அந்த அளவில் இத்தொகுப்புக் கவிதைத்தொகுப்பாக அமைவது எதிர் பார்க்கப்படதக்க ஒன்றேயாகும்.

''வானம் எம்வசம்'' எனும் சொற்றொடர் புதுவை இரத்தினதுரையின் முதலாவது கவிதையிற் காணப்படுவதாகும்.

நிலமு மெம்வச மானது; எங்களின்
நீல ஆழ்கடல் எம் வசமானது
நிலவு ஏறிடும். வானமும் எம்வசம்
நின்று நடந்திடும் காலம் வந்தானது.

இலங்கையில் நடக்கும் இன விடுதலைப் போராட்டத்தில், விமானப் பயன்படுத்துகை தமிழ் மக்கள் மீது எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது என்பதை விளக்கும் மிக முக்கியமான ஆவணமாக இந்தத் தொகுதி அமைகிறது.

1984 முதல் உக்கிரமடைந்துள்ள இப் போராட்டத்தில் விமானத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களுமே மக்களிடையே பாரிய விளைவுகளை ஏற்படுத்தி வந்துள்ளன. என்ன செய்வதென்பது அறியாது கையறு நிலையில் விமானங்கள் நிகழ்த்திய கோரத்தாக்குதல்களை ஏற்று, அவை ஏற்படுத்திய திடீர் இழப்புக்களை மக்கள் எவ்வாறு தாங்கி வந்துள்ளனர் என்பதை, அந்த வானளாவிய பயம் நீங்கியது என்றதும் கொப்புளித்துப் பாயும் இக் இக்கவிதைத் தொகுதி சுட்டுகின்றது. விமானத் தாக்குதல்களின் கொடூரத்தை விளக்கும் பதிகையாக இவ்வெளியீடு அமைகின்றது.

# வெளிச்சம்

ஒவ்வொரு கவிஞர்களும் தத்தம் நிலைகளிலிருந்து விமானவீழ்த்துகையைப் பார்த்துள்ளனரெனினும் விமானத்தாக்குதல்களின் பாதிப்பு இவை யாவற்றினூடாகவும் வெளிப்படுகின்றது.

''செய்த வினை சூழ்ந்ததுவோ,
இதுதான் எங்கள்
தேசமெலாம் குண்டுகள் போட்டழித்த
யமன் ஊர்தி''
— நம்பியாரூரன்

''வயிறு வெடித்துக் கிடக்கும்
வல்லூறுகளைப் போய்ப்பார்
குடலை அறுத்து
குருதி குடித்தலைந்த
உயிர் கொத்திப் பறவைகள்-......''
— விவேக்

''பாவங்களின் கூடுகள் எரிவதைக்
கண்டேன்
சாபங்களும் திட்டுதல்களும்
வாங்கிப் பெற்ற நரகப் பிறவிகள்
நிணமாகிச் சிதறிப்போன செயல்
பார்த்தேன்''

...................................................

...................................................

''கெந்திக் கொண்டு நானோடும்
போதெனது
உயிர் தேடித் தேடி வந்த
பாவங்களின் கூடுகள்
இன்று அழியுண்டு போவதைப்
பார்த்தேன்''
— கருணாகரன்

''காற்றை உதைத்து
அலைந்து திரிந்த கொடிய பறவைகள்
வாய்பிளந்து உடலெரிந்து
போனதென்ன''
— சத்துருக்கன்

இந்தப் பொதுப் பண்புக்குமேலே கவிதைப் படைப்புக்கள் என்ற அளவில் நோக்கும்பொழுது பலத்த தர வேறுபாடுகள் காணப்படுவது தவிர்க்கப்பட முடியாத ஒன்றேயாகும்.

முருகையனின் கவிதை அங்கதச் சுவை கொண்டதாக அவருக்கே இயல்பான சொல் வீச்சும் சொற்றொடரோட்டமும் கொண்டதாக அமைந்துள்ளது.

இக்கவிதைத் தொகுதியை நோக்கும் பொழுது பலகவிதைகளின் 'சம்பிரதாயத் தொனி' மேலே கிளம்புவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அது கவிஞர்களின் குறைபாடு என்று சொல்லி விடமுடியாது. இன்ன சந்தர்ப்பத்தில் இவ்வாறுதான் பாட வேண்டுமென்ற ஒரு மரபு எம்மிடையே உண்டு. அந்த மரபின் ஆட்சியை நிச்சயமாகச் சில கவிதைகளிலே காணக் கூடியதாகவுள்ளது.

கவிதையின் கவர்ச்சி அதன் அசாதாரணத் தன்மையிலேயே தங்கியுள்ளது. உணர்ச்சி எடுத்துக் கூறப்படும் முறைமை (உண்மையில் இது உணரப்பட்ட முறைமையின் அடியாகவே வருவது) அந்த எடுத்துரைப்புத் தோற்றுவிக்கும் படிமங்கள் கவிதையின் கவர்ச்சிக்கு உயிராகும். கவித்துவம் என்பது ஒரு குறிப்பிட்ட கட்டுக் கோப்புக்குள் நிற்கும் சொற்களுக்கு நாத வீச்சைக் கொடுக்கும் திறனேயாகும். இந்தத் திறன் மரபுக்கவிதையில் உள்ள அளவுக்குப்புதுக்கவிதையில் உண்டு. இந்த நாத வீறு இல்லையெனில் மரபுக்கவிதை வெறும் சொல்லடுக்கு ஆகும்; புதுக்கவிதை வாக்கியமாகிவிடும்.

இந்த ''நாத வீரியம்'' உள்ள சில கவிதைகள் இந்தத்தொகுதியிலே காணப்படுகின்றமையைச் சுட்டிக்காட்டுவது கடமையாகும்.

ச. வே. பஞ்சாட்சரம், புதுவை இரத்தினதுரை, அ. யேசுராசா, வீவேக், கருணாகரன், கி. சிவஞானம், சத்துருக்கன், ஆதிலட்சுமி சிவகுமார், நாமகள், மயன்-2 ஆகியோர் கவிதைகளில் சொல்லுக்கு அப்பால் நிற்கும் உணர்வு நிலை மிக வன்மையுடன் வெளிவந்துள்ளது.

போராட்டத்தின் மக்கள் நிலை உணர்வுகளைப் பதிவு செய்யப்போகும் வருங்கால ஆய்வாளனுக்கு இச்சிறு தொகுதி ஓர் அத்தியாவசிய ஆவணமாகும். □□

## வெளிச்சம்

மதிப்பீட்டுரை

# விடியலின் கீதம்

**மீசாலையூர் கமலா**

- 52 பக்கங்கள்
- 30 ரூபா

மீசாலையூர் கமலாவின் விடியலின் கீதம் கவிதைத் தொகுதியைப் படிக்கையில், எமது கவிதைகள் பற்றிய எண்ணங்கள் கிளர்கின்றன. பொதுவாக எமது கவிதைகளில் நல்ல கவிதைகளை இனங்காண்பதே எமக்குள்ள தேவை. ஆனால் துரதிஸ்டவசமாக அறிவு பூர்வமான அணுகல் இல்லாமல் மரபுக் கவிதைக்கும், புதுக் கவிதைக்கும் 'பட்டிமண்டபம்' வைக்கப் படுவது ஆரோக்கியமானதல்ல.

மரபுக் கவிதையில் நல்ல, மிக நல்ல கவிதைகள் வந்துள்ளன. அதேயளவுக்கு வெறும் வார்த்தையாடல்களும், அர்த்தமற்ற சொற் சிலம்பங்களும் மரபுக் கவிதைகளென நிற்கின்றன. எதுகை, மோனை பேணலுக்காக பொருத்தமற்ற வார்த்தைகளைப் பிரயோகிப்பது காணப்படுகிறது. இத்தகைய கவிதைகளைப் படித்துவிட்டு, சிலர், மரபுக் கவிதைகள் 'குப்பை' என்கிறார்கள். இது எப்படிச் சரியாகும்?

அது போன்றே வெற்றுக் கோசங்களாக, ஆழ்ந்த பொருட் செறிவோ, அழகியற் பாங்கோ அற்றனவாகக் காணப்படும் புதுக் கவிதைகளைப் படித்துவிட்டு, கற்றுக் குட்டித்தனமாக 'சந்த ஒத்திசைவே கவிதையின் பண்பு, மரபை நிராகரிக்கும் புதுக்கவிதை ஆற்றாமையின் வெளிப்பாடே' என்று கூறுவதும் எப்படிச் சரியாகும்?

பொதுவாக நல்ல கவிதைகள் நிலைத்து நிற்கக் கூடியவை. அவற்றில் ஒரு அழகியற் பாங்குண்டு; ஆழ்ந்த பொருளுண்டு. வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் பொருத்தப்பாடாக அமைகிற தன்மை உண்டு. திருவள்ளுவரின் ஈரடி வெண்பாக்களான குறள் முதல் இன்றைய புதுக்கவிதைகள் வரை இவ்வாறு பலவற்றைக் கூறமுடியும்.

இக்கவிதைத் தொகுதியைப் படிக்கையில், மீசாலையூர் கமலாவின் வெளிப்பாட்டு முறைமை சரியாக அமையாதது தெரிகிறது. மரபுக்கும், நவீனத்துக்கும் இடையில் நின்று கவிஞர் ஊசலாடுவது கவிதைகளில் வெளித்தெரிகிறது.

இது அவரது முதல் தொகுதி. பத்திரிகை, சஞ்சிகைகளில் அவ்வப்போது வெளியானவற்றைத் தொகுத்தது.

தமிழீழ விடுதலைப் போரை, போரின் நியாயப்பாட்டை, பெண்களின் அவல வாழ்வை, அதற்கான காரணிகளை, பெண்ணியக் கருத்துக்களை, மாவீரரை, கடவுளரை என்று இவர் கவிதைகள் பாடுகின்றன. சில போற்றுதல்கள்; சில வேண்டுதல்கள்; சில சாடல்கள்; இவ்வாறு பல.

மீசாலையூர் கமலாவின் ஆரம்பப் படைப்பாயினும், இதனுள் நுழைந்தால் நமக்குள் உறைக்கும் கருத்துக்களும், நம்மை சுயமாய் விமர்சிக்க வைக்கும் வினாக்களும் காணப்படுகின்றன. அந்த அளவில் -முதல் படைப்பில்-அவர் துலங்குகிறார். எனினும் ஆழ்ந்த தேடலும், வெளிப்பாட்டு முறைமையும் அவரிடம் கைவர வேண்டும்.

— **இயல்வாணன்**

□□

SUN BRAND

பகலவன் அடையாள உற்பத்திகள்
உங்கள் விருப்பத்திற்கேற்றவை

சுவையும் மகிழ்ச்சியும் தரும்

தோடம்பழ இனிப்பு
கறுவா இனிப்பு

பார்லி சுகர் ரொபி
சுப்பர் மில்க் ரொபி

கொக்கோ மோல்ட்ஸ்

மற்றும் எல்லா வகை இனிப்புகளின்
உற்பத்தியாளரும் விற்பனையாளரும்

SUN BRAND
TOFFEES & SWEETS

அளவை இனிப்புத் தொழிலகம்

தாவடி - மானிப்பாய் வீதி,
கொக்குவில்.



தமிழீழ இலக்கியத்தைத் துலங்கவைக்கும்

வெளிச்சமே!

உனக்கு எமது வாழ்த்துக்கள்

- தரமான ரிங்கர் வேலைகள்
- இரும்பு, வில்லுத்தகடு வேலைகள்
- லொறி பொடி வேலைகள்

அனைத்தையும் திறம்படச்செய்து தருபவர்கள்

என்றும் உங்கள் நினைவில் இருக்கட்டும்

# யாழ் இரும்புத் தொழிலகம்

புகையிரத நிலைய அருகாமை,

கொக்குவில்.

பொது சன நூலகம்.
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

கலை இலக்கியப் பரப்பில் 'வெளிச்சம்'
புதிய ஒளிபரவ எமது வாழ்த்துக்கள்

□ □ □ □ □ □ □

உங்களுக்குத் தேவையான

பலகைகள்

தீராந்திகள்

மரங்கள்

மற்றும்

விறகு

எல்லாவற்றையும் நீங்கள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளுங்கள்

# உதயன் மரக்காலை

பெரியமாவடி ஒழுங்கை (இளங்கோ வீதி)
சங்கத்தானை - சாவகச்சேரி

ஒரு உழைப்பாளி சொல்கிறார்:

"சோறெண்டால் இதல்லோ. ஓடி உழைச்சு,
களைச்சுப் போய் வாற எங்களுக்கு
ருசியாயும் மணமாயும் இல்லாத சோறு
என்னத்துக்கு? நான் அரிசி வாங்கிறதெண்டால்
விஜிதா அரிசி ஆலையிலை தான். அங்கை தான்
நல்ல அரிசி இருக்கு"

ஆம்!
உங்களுக்குத் தேவையான

- நாட்டரிசி
- திட்டல் பச்சை
- உடையல் பச்சை

அரிசி வகைகளை எம்மிடம்
பெற்றுக் கொள்ளுங்கள்

# விஜிதா அரிசி ஆலை

தாவடி தெற்கு,
கொக்குவில்.

சுவைப் பிரியர்களுக்கு.....

## சந்திரா கச்சான் அலுவா

# NEW
# CHANTHIRA INDUSTRIES

தரமான உள்ளூர் தயாரிப்புகள்

- கச்சான் அலுவா
- இனிப்பு வகைகள்
- ரொபி வகைகள்

அனைத்துக்கும்

எம்மை நாடுங்கள்

**வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு**

# NEW
# CHANTHIRA INDUSTRIES

# புதிய சந்திரா தொழிலகம்

209/1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.